V3 · N03/ · 7 Apr 1980

3L
ஶ211, N28KN
N30'3'31
189115

1256

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஞு ஆகஸ்டு மீ 7உ [No. 31.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 601
2. அப்பர் (வில்வித்தை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B L. 603
3. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B L. 604
4. மாதவி மாதவம்—பொ. இராமானுஜன் 607
5. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப்படலம்) 608
6 நம்மாழ்வார் வைபவம் (1ம் பத்து—9ம் தசகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 611
7. குறுந்தொகை (பாட்டு 106—116)
K. இராமரத்நம் ஐயர் B. A. 612
8. கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 615
9. தனிப்பாடல்—(நாமகள் திருப்பள்ளி யெழுச்சி)
நாவாலி, கா. சோமசுந்தரம்பிள்ளை 619
10. வர்த்தமானம் 619

கலாநிலயம்

நாணத்தால் நைவார்திறம்.

கள்ளுக்கடையும் வேசையர் வாழ்வீதியும் போலவே, சட்டசபைகளும் வழக்குமன்றங்களும் சிறைச்சாலைகளும் பள்ளிக்கூடக்கட்டிடங்களும் நம்முடைய அவமானத்தின் அடையாளங்களென்பதை மாந்தர் சிறிதேனு முணர்வாராயின் இன்னவைகளைப் பின்பற்றி இத்துணை முயலமாட்டார். கள்ளுக்கடையையும் வேசையர்களையும் நாடுவார் சனத்தொகுதியில் மிக மிகச் சிலரே. அச்சிலரும் தகாத காரியத்தைச் செய்கின்றூர்தாம் என்பது தெரிந்து, யாக்கையின் வேட்கையை அடக்க வியலா எளிமையால் இந்தத் தீமைகளுக்கு ஆளாகின்றனர். நல்லுணர்வும் நாணமும் அவர்களை இடைவிடாது தடுக்க முயன்றுகொண்டிருக்குமாதலால் ஒருநாளல்லாக்கால் ஒருநாள் அவர் நல்வழிப்படுவது மாகலாம்.

சட்டசபைகளும் வழக்குமன்றங்களும் சிறைச்சாலைகளும் பள்ளிக்கூடக் கட்டிடங்களும் நம் குடிவாழ்க்கைக்கு இன்றியமையாதனவென்னுங் கொள்கையோ மிகக் கொடியது. இவைகளின் கொடுமைகளை எங்கெங்குங் கொண்டுசெலுத்துவதற் குரியகருவியாய்த் திரியும் வர்த்தமானப்பத்திரிகைகள் மனிதர் மனத்தைத் திரித்துக் கெடுக்கின்ற தன்மையையும் அளவையும் அறியும் ஆற்றலில்லாமையால் இந்தப் பத்திரிகைகளும் இன்றியமையாதனவாய்க் கருதப்படுகின்றன. புறத்திலிருந்து சில சட்டங்களை நிறுவியதனுள் ளடக்கியாண்டாலன்றிச் சனங்கள் தருமநெறி ஒழுகமாட்டார் என்ற எண்ணத்தினுல் சட்டசபைகள் இயங்குகின்றன. அன்பு அருள் ஈகை என்னும் நற்குணங்களில் எள்ளளவும் இல்லாதவர்க்கே வழக்குமன்றத்தில் தீர்ப்புக்கள் வேண்டும். தீமைகள் புரிவார் சிறைச்சாலை வாசத்தால் திருந்துவதில்லை என்பது மலையிலக்காயிருந்தும், சிறைச்சாலையும் 'போலீஸாரும்' இல்லாக்கால் குடிகெட்டுவிடும் என்று எண்ணுவார் பேதைமையை என்னென்றியம்புவது ? மக்களைப் பள்ளிக்குப் போக்குகின்றனர் என்பதன்பொருள் யாது எனச் சிந்திப்போமாயின், தம் மக்களுக்குத் தாமே கற்பிக்கும் ஆற்றலில்லாப் பெற்ரோர் வீட்டிலிருக்கின்றனர் என்பதேனும், ஆற்றலிருப்பினும் ஆசையிலாரென்பதேனும், ஆற்றலும் ஆசையும் இருப்பினும் "தங்களுக்கு நேரமில்லை" என்னுமோர் மாயநினைவினில் ஆழ்ந்துழல்பவர்களென்பதேனும் புலப்படும். தீமையென்றறிந்து ஒரு தீமையின் வாய்ப்பட்டோர் மீளினும் மீளலாம். நல்லதை நாடுகின்றோம் என்ற நினைவில் தீமையைப் போற்றுவோர் திரும்புதல் அருமை. தாமும் அறியார், அவர் பிறர் சொன்னாலும் எளிதில் கேட்கமாட்டார். நல்லன அல்லவென்று தெரிந்திருந்தும் இவைகளில் விவகரிப்போரிற் சிலர் எக்கருத்துடையவராதல் வேண்டுமென்று யாம் இயம்புதல் மிகை.

189115

சட்டசபை முதலியவைகள் நம்முடைய அவமானத்திற் கடையாளமானவையென்று நாம் கூறுவது அவை தற்காலம் நடைபெறுகின்ற முறையிலுள்ள இழுக்குக்களைப் பற்றியன்று. அவை தாம் இருப்பதே அவமானம். காணுந்தோறும் மானமழிந்து அழுங்கவேண்டிய அவைகளைச் சனங்கள் கொண்டு குலாவுகின்ற இவ் விபரீதத்தை யாரிடத்து உரைசெய்து ஆறுவோம். எப்பக்கம் திரும்பி நோக்கினும் மக்களின் மாயாத பெரும் பழியையே இவை பரக்கக் காட்டுகின்றன. இந்தப் பழியைச் சாதாரண ஜனங்கள் உணர்ந்துகொள்வது எளியதன்று. கல்வி கேள்விகளால் முதிர்ந்த மனமுடைய ஆராய்ச்சியாளர் இவ்வுண்மையைக் கைக்கொண்டு அதற்குத் தக்கபடி குடிவாழ்க்கையை அமைக்கவேண்டிய கடப்பாடுடையவர்களா யிருக்கின்றனர். அவர்களுமே, வெவ்வேறு நோக்கங்களால் தூண்டப்பெற்றுத் தாம் தாம் கற்றன வற்றையும் கேட்டன வற்றையும் போக்கிலே போகவிட்டு விவகரிப்பாராயின் பொதுஜன மக்கள் கதிதான் பின் என்னும்? பொருளைவிட்டு நிழலைத் தொடர்வது வீண்; மற்று, இருளையே ஒளியென்று கொள்வதோ கொடியது. இருட்டிலே காலுங்காலும் இடறித் தலையுந்தலையும் இடித்துக்கொண்டு திரிதருமிக்கோலத்தை நாடகக் காட்சியென்று களிக்கின்ற ஏழ்மையிலிருந்து தப்பாத நாடு எதற்குந் தகுதியற்றதாய் நிற்கின்றது.

இனிச் சட்டசபையும், வழக்குமன்றங்களும், சிறைச்சாலை 'போலீஸ்' முதலிய ஏற்பாடுகளும், பள்ளிக்கூடங்களும், இவ்வினங்களைச் சேர்ந்த மற்றுஞ் சிலவைகளும் நம்முடைய அவமானத்திற்கே அடையாளங்களா யமைவது எப்படி என்பதைச் சிறிது ஆராய்வோம். அவ் வாராய்ச்சியில், மனிதனது சிறுமைக்கு இவை அவசியம்போல் தோன்றுகின்ற தோற்றத்தால் மயங்காது மானுடப்பெருமையில் அவை எவ்விடம் பெறுகின்றனவென்னும் நினைவிலேயே நம்முடைய கருத்தை நிலைநிறுத்தி வைக்கவேண்டும். உள்ளத்தால் அனைவரும் உயர்ந்தவர் என்பதை மறத்தலாகாது. தீவினையச்சம் முற்றிலும் இன்னும் போய்விடவில்லை. தீமையே பூண்ட புன்மையோரும் ஒவ்வோர் வேளையில் தம் தொழிலைக் குறித்து நாணுகின்றனர். இது யாவர்க்குந்தெரிந்ததாயிருக்கலாம். ஆனால் பலர்க்குத் தெரிந்திராத உண்மை வேறொன்றுளது. அற்பநினைவும் அற்பச் சொற்களும் அற்பச்செயலும் சூழ்ந்திருக்கின்ற இக் காலத்தில் தம் நெஞ்சறிந்த நன்மையைச் செய்ய நாணவேண்டியும் வருகின்றது. பொய்வழக் கெடுத்திருப்பவன் ஒருவன், நற்புத்தியால் அவ்வழக்கை விட்டுவிடலாம் என நினைத்தாலும் நாலுபேர் தன்னைக்கண்டு நகைப்பரே என்று நாணி அதனை விடாது தொடர்கின்றான். பிச்சைக்காரனைத் துரத்துவதக்கு நாணுவதில்லை பலர். ஆனால் "இவனுக்குக் கால்ரூபாய் தான் கொடுத்தாலென்" என்று பரிவுடன் நினைக்கின்றவனும், "பித்தன் இவன் யார்" என்று நாலுபேர் தன்னைக்குறித்து நகைப்பரே என்றுநாணிக் காலணாவே கொடுக்கின்றான். வெட்கமின்றிப்போய் மற்றவர்களை வாயில்வந்தபடி வைகின்றார் சிலர்; ஆனால் அவ்வாறு வைதது தவறுஎன்று தெரிந்தபின்னும் "என் பிழையைப் பொறுத்தி" என்றுசொல்ல இயலாமைக்குக் காரணம் நாணமே. பொய்வழக் கெடுக்கவும், இரவலனுக்கு இல்லையென்று மறுக்கவும், வன்சொல் வழங்கவும் இடந்தராமல் மனிதரைத்தடுக்க வேண்டிய இயற்கை நாணம், இப்பொழுது அதற்கெதிராய், அவ்வழக்கை விடுவதற்கும், இரவலனுக்குக் கொடுக்கவும், வழங்கிய சொற்களுக்குக் கழிவிரக்கங் கூறி ஆற்றவுந் தடையாயிருக்கின்றதென்றால், இவ்விபரீதத்தின் பொறுப்பு, முன்னணியில் நின்று உலகத்தைச் செலுத்துவோர்தம் தலைகளைத் தேடிச்சென்றுச் சேரவில்லையோ?

இத்தகையதோர் விபரீத நாணம் எதன்பால் பிறந்து எவ்வகைவளர்ந்து நன்மைக்கு இடையூறாய் எங்ஙனம் நடக்கின்றதென்பதை உய்த்துணர்ந்தால் இவ்வுலகத்தி னியல்பு எவ்வாறு அமைய வேண்டுமென்பது புலப்படும். அது புலப்படாத வரையில், அழிவையெல்லாம் ஆக்கமென்றும், ஆக்கத்தை அழிவென்றும் தலைமயங்கி அல்லல் பெரிதுழல்வார் மாந்தர். இது தெரியாதபடியாற்றான் சட்டசபைகளையும் ஓட்டுத்தேர்தல்களையுங் கண்டு நாணமலிருப்பதுடன் அவைகளைக்கொண்டாடவுங் கொண்டாடுகின்றோம்; சிறைச்சாலைகளையும் போலீஸ்காரர்களையும் கண்டு "இற்றோ இக்குடிவாழ்க்கை" என்று சோராமல் விவகரிக்கின்றோம். சிறைச்சாலைகளுக்குள் செல்பவர் எத்தகையவர்களாயினும் நாணிக் கரைந்து நெகிழவேண்டியவர் வெளிநிற்பவர்களே. வழக்குமன்றங்களைக் காணுந்தோறும் கருத்தழிந்துபோகவேண்டிய நாம் நம்முடைய பெருமையையும் உரிமையையும் வளர்க்குமிடம் அதுவென்று மதிக்கின்றோம். பள்ளிக்கூடங்களைப் பார்த்தவுடன் பெற்றோர் மனம் பதைபதைக்கவேண்டும். கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுப்பதுபோலப் பிள்ளைகளைப் பெற்று அப் பள்ளிக்கூடங்களுக்கு இரையாக்குகின்றனர். "வகையற்ற யான் என் பிள்ளையைப் பள்ளிக்கனுப்புகின்றேன்" என்று தலைகுனிந்திருக்க வேண்டியவர், "என் பிள்ளை முதலில் தேறினான், இரண்டாவதில் தேறினான்" என்று ஏமாந்து பேசுகின்றனர். நாண வேண்டிய வேண்டியவைகளுக்கு நாணும்நாள் என்றைக்குப் பிறக்கின்றதோ அன்றைக்கே நற்காலம் உதித்ததென்றெண்ணலாம். நாணமில் வாழ்க்கையில் நடிக்குமிக் கபடநாடகத்தை முடிப்பதே முறை.

அப்பர்

8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

8. வில் வித்தை.

[584-வது பக்கத் தொடர்ச்சி]

(iv) விற்போர்

சிலையில் * கணைகளை யமைப்பதே ஒரு அழகிய கலையென்னலாம். சரம் வைக்கும் இலக்கணத்திலேயே போர்வீரன் எவ்வாறு அதைச் செலுத்துவானென்பதுநன்குவிளங்கும் †. அத்தகைய ‡ கோலத்தை விளக்குவதுபோல் திருநாவுக்கரசரும்,

இலையுடைப் படைகை யேந்து
மிலங்கையர் மன்னன் றன்னைத்
தலையுட னடர்த்து மீண்டே தானவற்
கருள்கள் செய்து
சிலையுடன் கணையைச் சேர்த்துத்
திரிபுர மெரியச் செற்ற
நிலையுடை யடிகள் போலு
நின்ற நெய்த்தான னாரே, என்பர்.
திருநெய்த்தானம் - திருநேரிசை 10.

சிலைக்கை வீரன் "ஏமருவும் வெஞ்சிலை" யேந்தின், பகைவரைச் சங்காரம் செய்யுமுன்னர்க் கோபத்தால் எவ்வாறு கண்சிவந்து நிற்பானென்பது அப்பர் பாசுரங்களிற் காணலாகும்:—

உவந்திட்டங் குமைபோர் பாகம் வைத்தவ ரூழியூழி
பவந்திட்ட பரமனார்தா மலைசிலை நாக மேற்றிக்
கவர்ந்திட்ட புரங்கள் மூன்றுங் கனலெரி யாகச்சீறிச்
சிவந்திட்ட கண்ணர் போலுந் திருப்பயற் றூரனாரே
திருப்பயற்றூர் - திருநேரிசை 2.

இவ்வண்ணம் நிற்குங்காலையில் அவன் கையில் உள்ள சிலையினின்று பாணங்கள் வெகு வேகமாய் ஒன்றின்பின் ஒன்று செல்வதால், தற்காலத்தில் குண்டுகள் விடப்பட்டபிறகு கொதிப்பேறித் தொடுவதற்கு இடங்கொடாமல் சில பாகங்கள் உருகவும் ஆரம்பிக்கும் பீரங்கிகளைப்போல் அது அதிக வெப்பம் பெறும். மூங்கிற்சிலையினின்று பாணங்கள் உருவி வெளிவரும் வேகத்தால் நாளடைவில், அவ்வில்லும் சற்று நீளுமென்பதும் திண்ணம். அப்பர் பிறந்த குடியும், திலகவதியாருக்கு நியமித்த கணவன் குடியும், இராஜசம்மந்தமாய்ப் போர்முனைக்குப் பின்வாங்காத சுத்தவீரர்களின் குடியாதலால், வில்வித்தையின் பிரத்தியட்ச வநுபவம் அப்பர் பெற்றது ஆச்சரியமன்று. திரிபுர சங்காரத்தில் பரமனேந்திய வில்லையும் கணையையும் அவற்றைப் பயன்படுத்து முறையையும் கூறுங்காலை, இவ்வநுபவநுட்பங்களை ஏற்றிக் கூறுவார்:—

தலையுருவச் சிரமாலை சூடி னான்காண்
டமருலகந் தலைகலனாப் பலிகொள் வான்காண்
அலையுருவச் சுடராழி யாக்கி னான்காண்
அவ்வாழி நெடுமாலுக் கருளி னான்காண்
கொலையுருவக் கூற்றுதைத்த கொள்கை யான்காண்
கூரெரிநீர் மண்ணொடுகாற் றாயி னான்காண்
சிலையுருவச் சரந்துரந்த திறத்தி னான்காண்
டிருவாரூ ரான்காணென் சிந்தை யானே.

மலைவளர்த்த மடமங்கை பாகத் தான்காண்
மயானத்தான் காண்மதியஞ் சூடி னான்காண்
இலைவளர்த்த மலர்க்கொன்றை மாலை யான்காண்
இறைவன்கா ணெறிதிரைநீர் நஞ்சுண் டான்கா [ண்
கொலைவளர்த்த மூவிலைய சூலத் தான்காண்
கொடுங்குன்றன் காண்கொல்லை யேற்றி னான்
சிலைவளர்த்த சரந்துரந்த திறத்தி னான்காண் [காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே.
திருவாரூர் - திருத்தாண்டகம். 719.

இவ்வாறு * 'ஏவணைத்தசிலை'' யினின்ற நீண்டவெங்கணை † பரமன் வில்லினின்று புறப்படும் வர்ணனைகளால் அப்பர்காலத்திய வில்வித்தையை அநுமானிக்கலாமன்றி வில்வித்தையையே விவரிக்கும் தேவாரப் பதிகங்கள் காணப்படவில்லை. ‡

தெற்றினார் புரங்கண் மூன்று தீயினில் விழவோரம்பால் செற்ற வெஞ்சிலைவஞ்சர் விற்றூங்கிய காத்தை அப்பர் உருவகப்படுத்துவதைக் காண்க:—

கற்றார் பயில்கட னாகைக்கா ரோணத்தெங் கண்ணுதலே!
விற்றாங் கியகரம் வேனெடுங் கண்ணிவி யன்கரமே!
நற்றா ணெடுஞ்சிலை நாண்வலித் தகர நின்கரமே! [மினே.
செற்றார் புரஞ்செற்ற சேவக மென்னைகொல்? செப்பு
திருநாகைக் காரோணம் - திருவிருத்தம் 2.

* கணையமர் சிலையர் போலுங் கரியுரி யுடையர் போலும்
துணையமர்பெண்ணர்போலுந் தூமணிக்குன்றர்போலும்
அணையுடை யடியர்கூடி யன்பொடு மலர்க ளேவும்
இணையடி யுடையர் போலு மின்னம்ப ரீச னாரே.
திருவின்னம்பர் - திருநேரிசை 6.

† வரிந்தவெஞ் சிலைபிடித் தவுணர்தம் வளநகர்
எரிந்தற வெய்தவ னெழில்திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது விமையவர் குறைகொள
அரிந்தவன் வளநக ரந்தணை யாறே. சம்பந்தர்.

‡ பாடகஞ்சேர் மெல்லடிநற் பாவை யாளு
நீயும்போய்ப் பார்த்தனது பலத்தைக்காண் பான்
வேடனாய் வில்வாங்கி யெய்த நாளோ
விண்ணவர்க்குங் கண்ணவனாய் நின்ற நாளோ
மாடமொடு மாளிகைகண் மல்கு தில்லை
மணிதிகழு மம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
வணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே.
திருவாரூர் - திருத்தாண்டகம் 3.

*. திருவாரூர் திருத்தாண்டகம். 3

† மூன்னு மாடம் மதின்மூன் றுடனே யெரியாய்வீழத்
துன்னு வார் வெங்கணை யொன்று செலுத்தியசோதியான்
செங்நெ லாரும் வயற்சிக்கல் வெண்ணெய்ப் பெருமானடி
உன்னி நீடம் மனமே நினையாய் வினையோயவே. சம்பந்தர்

‡ திருநாகைக் காரோணம் - திருநேரிசை 5

கோரப்பூசல் விளைவிக்கும் * பெரும் பாணங்கள் மாத்திரம் நம் முன்னோர்நாளில் பயன்பட்டனவென்றெண்ணலாகாது. கையால் கும்பிடும் அளவையில் அவ்விஸ்தீரணத்தில் அடங்கக்கூடிய வில்லும், அதனின்று எய்யக்கூடும் சிற்றம்புகளு மிருந்தன. அவை பெரும்பாலும் பயிற்சிக்கும், † மேல்நோக்கிச் சிறிது தூரத்தில் பகைவனைத் துளைப்பதற்கும் பயனும். அவற்றின் உருவகம் தேவாரத்தில் மன்மதன் ‡வில்லும், அதனின்று அவனெய்யும் $கணைகளுமாம். இப்பகழிகள் கண்ணுக்குத் தோன்றாதனவாய்ப் பாய்ந்து இன்னல் விளைவிக்கும் தன்மையன. ஆகையால் சுத்தவீரனுக்கு நல்ல பாணங்களைத் தருவது பெருங்கொடையாம். இக்காலத்தில் யந்திர பீரங்கிகளை ஒரு அரசன் மற்றொரு அரசனுக்கு வெகுமதி செய்வானாயின், அக்கொடை எவ்வாறு நோக்கப்படுமோ அவ்வாறு அக்காலத்தில் பாணங்களும், திவ்யமந்திர அஸ்திரங்களும் பேருவகையோடு ஏற்கப்பட்டன. சரங்களும் அதை யேவத்தக்க வில்லும் ஒருவன் பெறின் பகைவர்கள் * நகரங்களைத் தற்காலப்போரில் பீரங்கிகளா லெரி மூட்டுவதுபோல் மூட்டவல்லனுவன். இக்கலைமுற்றும் அழிந்து, அதன் தத்துவம் கட்டுக்கதை போல் காணப்படும் இக்காலத்திலும் இந்தியாவிலுள்ள பெருங்காடுகளில் வில்லியர் இரண்டொரு அம்புகளால் புலிகளைக்கொன்று வீழ்த்துகின்றதை ஐரோப்பியர்களும்கண்டுவியக்கின்றார்கள். அத்தகைய வில்லை நாம் வளைப்போமாகின், பூட்டி எய்யும் சரம் நாலைந்து அடிதூரம் செல்லாது. சென்றாலும், அது தாக்கும் மிருகத்தின் தோலுக்கும் சற்றும் காயமுண்டாக்காது. இக் காட்டு வேடர்கள் இக்கலையின் பயிற்சியால் மிருகங்கள் மண்டைகள் உடைந்து உருளும்படி பகழிகளை விடுவார். அக்காலத்தில் யுத்தக்கலையில் முதற்கலையாம் சிலைதாங்கி எயினர் போர்க்களத்தில் முன்னிற்பாராயினர். இச்சேவகம் தேவாரத்தில் திருநாவுக்கரசுசுவாமிகள் சிவபெருமான், நம்முடைய பெரும்பகையான மாயபாசத்தை அறுத்தொழிப்பதற்கு வில்லைத் தாங்கியது குறிப்பென விளக்குகின்றனர்.

மலையாடங் கோனவனை மாநீர் முத்தை
மாகதத்தை மாமணியை மல்கு செல்வக்
கலைநிலவு கையானைக் கம்பன் றன்னைக்
காண்பினிய செழுஞ்சுடரைக் கனகக்குன்றை
விலைபெரிய வெண்ணீற்று மேனி யானை
மெய்யடியார் வேண்டுவதே வேண்டுவானை
சிலைநிலவு கரத்தானைத் திருமாற் பேறெஞ்
செம்பவளக்குன்றினைச் சென்றடைந்தே னானே
திருமாற்பேறு - திருத்தாண்டகம் 3.

யுத்தத்திற்கு முற்காலத்தி லின்றியமையா திருந்தமைபற்றி, புறப்பொருளில் பல சந்தர்ப்பங்களில் ஆண்டகையான நாயகன் நற்குணங்களை இக்கலைநலமுடைமை விளக்கும்.

* ஏவார்சிலை யெயினன்னுரு வாகியெழில் விசயற்
கோவாதவி னருள்செய்தவெம்மொருவற்கிடமுலகில்
சாவாதவர் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர்தொழு முதுகுன்றடை வோமே.
சம்பந்தர்.

† கற்பகமு மிருசுடரு மாயினானைக்
காளத்தி கயிலாய மலையுளானை
விற்பயிலு மதனழிய விழித்தான் றன்னை
விசயனொடு வேடுவனாய் நின்றான் றன்னைப்
பொற்பமரும் பொழிலாரூர் மூலட் டானம்
பொருந்தியவெம் பெருமானைப் பொருந்தார் சிந்தை
அற்புதனை யரநெறியி லப்பன் றன்னை
யடைந்தடியே னருவினைநோ யறுத்த வாறே.
திருவாரூரரநெறி - திருத்தாண்டகம். 2.

‡ கொங்கணி நறுங்கொன்றைத் தொங்கலன் குளிர்
[சடையான்
எங்கணே யகலநின்ற னெனவரு ளீசனிடம்
ஐங்கணை வரிசிலையா னநங்கனை யழகழித்த
பைங்கனவெள் ளேறுடையான் பருப்பதம் பாவுதுமே
சம்பந்தர்.

$ இக்கணைகளுக்கு மாற்றுப்பகழிகள் எவுதற்குஇயலாது பரமன் விழித்துக் கொன்றனர் போலும்:—

கணைபிணை வெஞ்சிலை கையிலேந்திக் காமனைக் காய்ந்த
[வர்தாம்
இணைபிணை நோக்கி நல்லாளொடாடு மியல்பினராகிநல்ல
இணைமலர் மேலன்னம் வைகுகான லிராமேச சுரமேயார்
அணைபிணை புல்கு கார்லைத சூடு மடிகள் செயுஞ் செயலே
சம்பந்தர்.

* கணையும் வரிசிலையு மெரியுங் கூடிக் கவர்ந்துண்ண
இணையி லெயின்மூன்று மெரித்திட்டா ரெம்மிறைவனார்
பிணையுஞ் சிறுமறியும் கலையுமெல்லாங் கங்குல்சேர்ந்
தணையும் பழையனூ ராலங்காட் டெம்மடிகளே.
சம்பந்தர்.

$ திரிதரு புரமெரி செய்த சேவகன்
வரியா வொடுமதி சடையில் வைத்தவன்
அரியொடு பிரமன தாற்ற லானுருத்
தெரியல னுறைவிடம் திருவிற் கோலமே. சம்பந்தர்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[592-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour).

இன்பமும் வேட்கையும்:—ஒரு வேலையைத் தக்க வழியிற் செய்துமுடித்தால் ஆறுதலடைகின்றோம்; மகிழ்ச்சி யெய்துகின்றோம்; இன்பம் பெறுகின்றோம். தவறிவிட்டால் ஆறாமை அடைகின்றோம்; வருத்தத்தால் உடல்நோவ நிற்கின்றோம்; துன்பமுறுகின்றோம். ஆறுதல்தரும் செயல்களைச் செய்ய முந்துகின்றோமேயன்றி நோவெடுக்கும் செயல்களைச் செய்ய முந்துவதில்லை. ஒருதொழிலைச் செய்வதற்கு முந்தும் விருப்புநிலையே வேண்டுதல் அல்லது வேட்கையாகும்; ஒருதொழிலைச் செய்யப் பின்வாங்கும் வெறுப்புநிலையே வேண்டாமையாகும். வேட்கைநிலையோ ஆறுதல் என்னும் இன்பத்தால் எழுகின்றது. வேண்டாமை நிலையோ, ஆறாமை அல்லது நோவு அல்லது

துன்பத்தால் எழுகின்றது. ஆதலினால் ஆறுதலும் மகிழ்ச்சியும் இன்பமும் தம்மோடு இயைந்த செயல்களைப் பழக்கமாக்குகின்றன. ஆறாமையும் நோவும் துன்பமும் தம்மோடியைந்த செயல்களைப் பழக்கமாக்காது தடுக்கின்றன. மீனானது கண்ணாடியில் முட்டிக்கொண்டு வருந்தி நோவுற்றுத் துன்பமடைந்தபோது அத்துன்பநினைவு பின்னர் அவ் வலப்புறம் போகும் செயலைத் தடுத்தது. இடப்புறம் போனபோது தீனிபெற்று ஆறுதலடைந்து இன்புற்றதால் அவ் வின்பநினைவு இடப்புறம்போகும் செயலைப் பழக்கமாக நிலைநாட்டியது. சுற்றுவழியிற் போவது வருத்தமாய் முடிந்ததால் அவ்வழியிற் போகாது நேர்வழியில் வெள்ளெலி சென்றது. நேர்வழியில் செல்லும்போது மின்னோட்டம் தாக்கவே அவ்வெள்ளெலி நோவுற்று ஆறாமை மீதூரத் துன்பமடைந்தது. அந்த நோவும் துன்பமும் அந் நேர்வழி போதலைத் தடுத்தன. இன்பத்தின் நினைவே நம் செயலைத் தூண்டுகின்றது. துன்பத்தின் நினைவே அதற்கியைந்த செயலைத் தடுக்கின்றது.

அகத்தேர்தல்:—இயற்கையில் முன் நாம் கண்ட இயற்கைத்தேர்தல் (Natural Selection), பாற்றேர்தல் (Sexual Selection) என்பன போல அகத்தேர்தல் (Psychical Selection) என்னும் உள்ளத்தேர்தலும் உண்டு. அகம் என்பதற்கு அன்பு என்றும் இன்பம் என்றும் பொருள். உண்மையில், அகத்தேர்தல் இன்பத்தேர்தலு மாம். இன்பநினைவால் முன் இன்பந்தந்த செயலைச் செய்தலே இத்தேர்தலாகும். பொதுவாக நோக்குமிடத்து, இன்பந்தருவன நம்முடலுக்கு நன்மை தருவனவேயாம்; துன்பந்தருவன நம்முடலுக்குத் தீமை பயப்பனவேயாம். எனவே இன்பநாட்டம் என்றால் உடனலம் நாடுவதேயாம். தொடக்கத்தில் உயிருளிகள், இன்பத்தை நாடியனவாகவும், துன்பத்தை நாடியனவாகவும், இருமையும் நாடாது நின்றனவாகவும் விளங்கியவைகளா யிருத்தல் வேண்டும். இயற்கைப்பரப்பில் நிகழும் போராட்டத்திலே, துன்பம் நாடியனவோ உடலழிவு நாடியவையாய் இறந்துபட்டன. ஒரு நாட்டமும் இல்லாதவையோ, உடனலம் நாடாது உரங்குன்றியொழிந்தன. இன்பம் நாடியனவோ உடலுரம்பெற்று உலகில் ஓங்வன வாழ்ந்தன. ஆகையால் இப்போராட்டத்தில் இன்பம்நாடியனவே வெற்றிபெற்று விளங்கின. அவ்வாறு வெற்றிபெற்றவற்றின் மரபில் வந்தனவற்றினிடமும் அவ் வின்பநாட்டம் காணப்படுமன்றோ? இவ்வாறு நாளடைவில் மற்றையோர் மறைய, இன்பநாட்டமுடையாரே இவ்வுலகில் எங்கும் பரவினர்.

உடனிலையா முதனிலையா:-துன்பம் என்பன உள்ளத்தின் நிலையல்ல, உடலியல்பே என்பர் ஒருசாரார். இன்பமாக இருக்கும்போது நம்முடல் ஒரு மாறுதல் அடைகின்றது. அத்தகையஉடல் மாறுதலுக்கே இன்பம் எனப்பெயர் என்றுமன்றுடுவர். இன்பமும்துன்பமும் நம்முடைய வேட்கைக்கும் வேண்டாமைக்கும் நம்முடைய உடனலத்திற்கும் உடனலிவுக்கும் முதனிலையல்ல. உடல்மாற்றமும் செய்யமுந்துறு நிலையும் இன்பதுன்பத்தின் பயனிலையுமல்ல என்பர். இன்பம் துன்பம்என்பன உடல்மாற்றத்தோடு உடன்விளங்குகின்ற உடனிலைகள் என்பர். உடலுக்கு நன்மை என்னும் இன்பந்தரும் செயல்களைச் செய்யும்போது உடல்நலம் பெற்று மாறுதலடைகின்றோம். அஃதேற்ற உணர்ச்சியேஇன்பம் உடலுக்குத் தீமைதரும் செயல்களைச் செய்யும்போது உடல் நொந்து நிற்கின்றது. அவ்வுடல் மாறுதற்கேற்ற உணர்ச்சியே துன்பம். எனவே, இன்பம் செயலைத் தூண்டுவதில்லை என்பர். ஆனால், இன்பம் என்பது உடல்நலம் தரும் செயல்களோடும், துன்பம் என்பது உடலுக்குத் தீமைதரும் செயல்களோடும் இயைந்தது எங்ஙனம்? இன்பம் என்ற உணர்ச்சி வேறுநிற்கின்றது. உடலுக்கு நன்மைபயக்கும் உடன்மாற்றங்கள் வேறு; இயற்கைப் போராட்டத்தில் முதல்முதலில் இவை எங்ஙனம் இயைந்தன; உடன் நின்றன? ஒன்று முதலும் ஒன்று பயனும் ஆயின் இக்கேள்விக் கிடமில்லை. இயற்கைப் போராட்டத்தின் பயனாக இன்ப உணர்ச்சியும் உடலுக்கு நன்மைதரும் செயல்களும் உடனியைந்தன என்று சொல்வதற்கில்லை. இவை இரண்டும் உடனியைந்தால்தான் உலகத்தில் உயிருளிகள் உயிர்வாழ முடியும் என ஒருதலையாக உறுதிகூற முடியாது. துன்ப உணர்ச்சியும் நன்மைதரும்செயல்களும் உடனியைந்தாலும் உயிர்வாழ முடியும். எங்ஙனம்? துன்பம் உடல் நன்மையோடுஇயைந்தால் இன்பம் உடலின் தீமையோடு இயைதல் வேண்டும். இயற்கைப் போராட்டத்தில் உடல்நலம் நாடியவையே வெற்றிபெறும்; அஃதாவது இந்நிலையில் துன்பம் நாடியவையே வெற்றிபெறும். இவ்வாறு உடனலந்தரும் மாற்றங்கள் துன்பத்தோடியைந்தும் இயற்கைப்போராட்டத்தில் வெற்றிபெற முடியுமாதலின், இன்பத்தோடு அவை உடன்இயைந்தது எங்ஙனம்? இவ்வியைபினைக் கடவுள் அமைத்தார் என்போமா? செய்க்காட்சியில் சிக்கிக்கிடக்கும் இயற்கைநூல் அதற்கு அப்பாலுக்கு அப்பாலாய்க்கிடக்கும் ஆண்டவனைக் கொண்டுவந்து இதற்குள் சிக்கவிடுதல் இயற்கைநூன் முறையன்று.

இன்பமும் நிறமா ?:— இறைவனைக் கொண்டுதான் வரவேண்டுமோ எனச் சிலர் வினவலாம். பச்சைப்பயிரிலும் பசும்புற்றரையிலும் மேயும் வெட்டுக்கிளிகள் பல நிறத்தோடும் தொடக்கத்தில் விளங்கின. பச்சைநிறம் பெற்றவை பயிரோடு பயிராய்ப் புல்லோடுபுல்லாய் வேற்றுமை தெரியாது நின்றதால் பகைவர் இவ்வெட்டுக் கிளியினைப் பிரித்தறிந்து கொன்று தின்பது இயலாததாயிற்று. வேறு நிறம் பெற்றவையோ பகைவர்வாயில் அகப்பட்டு மடிந்தன. ஆகையால் பச்சைநிறம் பெற்றவையே எங்கும் பரவின. இவ்வண்ணமே பழுப்புமணலில் வாழ்வன பழுப்புநிறம் பெற்றதால் உயிர் தப்பின. இங்கே பழுப்புநிறம் பச்சைநிறம் என்பவை போலவா இன்ப துன்பங்கள் உள்ளன. உடல்நலம் தரும் இயக்கங்கள் பச்சையாகவும் உடலுக்குத் தீமை தருவன பழுப்பாகவும் இருந்தனவானால் இவை மாறி நின்றாலும் "ஒன்றும் முழுகிப்போகாது" என்போம். ஆனால் இன்ப துன்பங்களைப் பச்சை நிறத்திற்கும் பழுப்புநிறத்திற்கும் ஒப்புமை கூறமுடியுமா? பச்சைப் பயிர்களில் வாழும் பச்சைநிற வெட்டுக்கிளிக்கு மாறாக பழுப்புப் பயிர்களில் வாழ்கின்ற பழுப்புநிற வெட்டுக்கிளிகளை மனக்கண்ணால் காணுதல் கூடும். ஆனால் அங்ஙனமே துன்பமே நாடி உயிர்வாழும் உயிருளிகளைப்பற்றி நாம் மனக்கண்ணால் காணுதல

கூடுமோ? அவ்வாறு காண்பதற்கு வேறோர் உலகைப் படைத்துக்கொள்ளுதல்வேண்டும்? தீவாய் நிரயத்தில் இடர்ப்படுவாரை எண்ணிக்கொள்ளுதல் வேண்டும். உயிரோடு மக்களைச் செக்கிலாட்டும்போது குருதி வடியும்; தசை கூழாகும்; ஆனால் உயிரோ போகாது; மறுபடியும் செக்கிலாட்டவேண்டி உடல் வளரும். அவ்வாறே தீயில் எரிவாராது உடலும் தீய்ந்தபின்னும் வளர்ந்து எரியுமாம். துன்பநாட்டமும் உடனலமும் ஒன்றாயின் இவ்வுலகமும் தீ வாய் நிரயமாகவன்றோ மாறிவிடும். நாம் அறிந்தனவற்றிற்கெல்லாம் முரண்பட்டன்றோ கிடக்கும் அவ்வுலகம். பச்சைப் பயிரில் மேயும் பச்சை வெட்டுக்கிளிக்கு மாறாக பழுப்புப் பயிரில் மேயும் பழுப்பு வெட்டுக்கிளியோ அவ்வாறு நாம் அறிந்தனவற்றோடு எந்நாளும் முரண்படாதன்றோ? ஆதலின் நிறத்தோடு இன்பத்தையும் ஒருங்குவைத்து எண்ண இயலாது. ஆகவே இன்பமும் உடனலமும் ஒன்றாக இயைந்தது உண்மையானால் நிறஇயைபுபோன்ற பொதுஇயைபுகளினும் வேறாகியதொரு சிறப்பியைபாகும் ஈது. இச்சிறப்பியைபு உலகினிற் புகுந்தது எங்ஙனம்? இயற்கைநூலைக் கைவிட்டு இறைவனிடம்தான் செல்லுதல் வேண்டும். இவ்வாறு இயற்கைநூலைக் கிழித்தெறிவதும் முறையோ? கடவுணூல்களும்இறைவனை,இயற்கைநூல்கள் கூறும் முதல்நிலைகளுக்கெல்லாம் முன்னிற்கும் முதனிலை என்று புகழ்கின்றனவேயன்றி இயற்கைநூல் கூறும் முதனிலையளவில் அவனை இழுத்துவந்து விடுவதில்லை. அவ்வாறு இழுத்துவந்துவிட்டால் நம்வீட்டு அடுப்பை உயர்நிலையில் அல்லாது உலகநிலையிலேயே நேர்நின்று மூட்டுவாரும் கடவுளேயாய் நமது மடையராய்விடுவார். இறைவனை இங்கு இழுப்பதில்லை என்றால் உடல் மாற்றமும் இன்பமும் ஆவிற்கு இரண்டு கொம்புபோல ஒருங்கு உடன்நிற்பன எனக் கொள்ளாது, இன்பம் முதல் என்றும், வேட்கையும் உடன்மாற்றமும் பயன் என்றும் கொள்ளுதல் வேண்டும்.

இன்பம் ஒரு வழிகாட்டி:—நம்முடைய செயலின் வெற்றியோடு இன்பமும், செயலின்தடையோடு துன்பமும் இயைந்துள்ளன என்ற உண்மையானது உள்ளத்தியற்கைநூலின் அடிப்படையாகும். இயைபென்று மட்டும் சொல்லிவிட்டால் உண்மைவிளங்குவதில்லை. இன்பமானதுஇன்பந்தருஞ் செயலைநீட்டித்துச் செய்யத் தூண்டுகின்றது; அதில் ஊக்கத்தை விளைக்கிறது; அதனை நமதுமனதிற் பதியுமாறு செய்கின்றது. "வெற்றிபோல வெற்றி தருவது வேறொன்றில்லை" (Nothing succeeds like success) என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. துன்பமோ வருத்தத்தைத்தந்து செய்யுந் தொழிலில் மனஞ் செல்லாதவாறு தடுத்து நம்மை வெளிக்குஇழுத்துச் செல்கின்றது. இவ்வகையால் இன்பதுன்பங்கள் நமக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றன. நமது நோக்கத்தை நிறைவேற்றச் செய்யும் முயற்சிகளைத் திருத்தியமைக்கின்றன. மனஇயக்கத்தின் சிறப்பியல்பு முன்னோக்கி எதிர்பார்த்தலே என்று கண்டோம். முன்னர் ஒருமுறை வெற்றிபெற்ற நிலையில் மற்றொருமுறை பின்னர்ப் புகுந்தால் முன்னைய வெற்றியால் நாமடைந்த இன்பம் நினைவிற்குவந்து ஊக்கத்தைத் தருகின்றது. அவ் வெற்றியையும் அவ் வாறுதலையும் எதிர்பார்க்கச் செய்து களிப்பூட்டுகின்றது. அங்ஙனமே முன் துன்பத்தை யூட்டிய நிலையையே மறுமுறையும் உணர்ந்தபோது அத்துன்பநினைவு நம்முடைய எதிர்பார்ப்பில் கலந்துகொண்டு களைப்பூட்டி நமது கருத்தை வேறு வழியில் திருப்புகின்றது. உலகிலே நாம் உணரும் பொருள்களும் நிலைகளும் ஒரேபடித்தாய் இருந்துவிட்டால் நம்முடைய இயற்கைச்செயனிலைகளே போதியனவாய் அமையும். ஆனால் உலகமோ மாறிக்கொண்டே போகிறது. நேற்றறிந்த நிலையே இன்று நிகழ்தல் அரிது. ஏதேனும் சிறு மாறுதலோடுதான் காண்கிறோம். இச் சிறுமாறுதலுக் கேற்றவாறு நமது இயற்கைக்செயனிலையின் இயக்கத்தை மாற்றியமைக்கவேண்டி நிற்கின்றது. புலியைக்கண்ட ஆடு அஞ்சுகின்றது. ஆடோ இப்புலி அப்புலி என்றவேற்றுமை பாராட்டுவதில்லை. இஃதுகீழ்நிலையில் உள்ளநிலைமை. மேனிலையில்உள்ள மக்களோ, ஒரு மகனைக் கண்டால் வெறுக்கின்றனர்; மற்றொருவனைக் கண்டு மகிழ்கின்றனர். கூட்டிலடைபட்ட புலியருகே செல்வர் ; பழகிய புலியருகே செல்லச் சிறிதஞ்சுவர்; செத்த புலியின்மேல் பெருமையாய் வீற்றிருப்பார்; காட்டுப்புலியைக்கண்டு கடுகவே ஓடுவர். இவ்வாறு கூர்ந்தெண்ணி வேறுபிரித்து உணர்கின்றனர். விலங்குகளிடையும் இதனைக் காணலாம். இவ்வாறு வேறுபிரித் துணர்வதற்கு வழிகாட்டுவன இன்பதுன்பங்களே யாம்.

இன்பமா இயக்கிவைக்கின்றது :—இன்பதுன்பங்கள் இவ்வாறு வழிகாட்டுகின்றன என்பதனோடு அமையாது, அவையே நம்மை இயக்கிவைப்பன என்று கூறுவாரும் இருக்கின்றனர். இன்பநாட்டத்தால்தான் ஒவ்வொரு செயலும் எழுகின்றது என்று சொல்வது மிக எளிது. ஆனால் நாம் முன்னர்க் கண்டபடி நம்மை யியக்கிவைப்பன உட்டுடிக்கும் இயற்கைச்செயனிலைகளே யாகும். மக்டேகல் என்பார் ஒரு நாட்டுப்புறத் தெருவழியே தானோடியில் (automobile) போயினாராம். அதனைப் பின்தொடர்ந்து ஒருநாய் உடன் ஓடி வந்ததாம். அத்தெருவினோரத்தில் பெட்டைக்கோழி யொன்று தன் குஞ்சுகளை ஒருங்குசேர்த்து நின்றது. ஓட்டமாய் ஓடிவருகிற நாய் அதனை யுணராது அதன் அண்டையில் ஓடியபோது அப் பெட்டைக்கோழி இறகையெல்லாம் சிலிர்ப்பித்துக்கொண்டு அந் நாய்மேல் பறந்து பாய்ந்தது. இன்பத்தை நாடியா பாய்ந்தது அக்கோழி? அந் நாயைக் கொத்திப் பெறும்இன்பத்தை எண்ணியதா? பாய்ந்ததில் ஏதேனும் இன்பம் பெற்றதா? முதன் முறை குஞ்சு பொரித்து, அன்றுதான் குஞ்சுகளைத் தெருவில் அழைத்துவந்த கோழியும் இங்ஙனம் செய்கிறது? ஆகையால் இதற்குமுன்னர்ப் பகைவர் தன் குஞ்சுகள்மேல் ஓடிவந்ததை உணர்ந்து இவ்வாறு நடந்துகொண்டது எனக் கூற இடம்இல்லை இந் நடத்தையோ அதன் இயற்கைச்செயனிலையின் இயக்கமாகும். உயிர்போனாலும் பகைமேற் பாய்ந்து குஞ்சுகளைக் காக்கும் தாய்மையன்றோ இந்நடத்தையில் காணக்கிடக்கின்றது. ஆதலின் இன்பமானது ஒரு வழிகாட்டியேயன்றி இயக்குவதன்று. இயற்கைச் செயனிலைகளின்வழி இயங்குகின்றன, மக்களையுள்ளிட்ட உயிருளிகள் அனைத்தும்; ஆதலின் இயற்கைச் செயனிலையே இயக்குவது எனத்தக்கது.

மாதவி மாதவம்

[586-வது பக்கத் தொடர்ச்சி.]

6. மாதவி விடுத்த காதன்மடலும், கோவலன் உரைத்த மறுமொழித் திறனும்.

தென்றற்காற்று மெல்லென வீசாநின்றது. வண்டுகள் தாழைப்பூவின் நறுந்தாதளைந்து இன்னிசை யெழுப்பின. உமையவள் கொழுநனொடு இமையவர்க்காகத் தன் உயிரையு மதியாது பொருத காமன்றன் சீர்த்தியை வாழ்த்துவனபோல் குயில்கள் தம் தீங்குரல்களாற் பாடின. மாந்தளிர்ச் செறிவினுள் பூவையுங் கிள்ளையுந் தாவி விளையாடின. தாழையை வேலியாகவுடைய கழிக்கானலிலே ஊழ்வினை வந்துற்றதாக யாழிசையைக் காரணமாகக்கொண்டு தன தன்பனைப் பிரிந்து தமியளாய்ப் போந்த மாதவி, விண்தொட நிவந்த தன் வியன்பெரு மாளிகையில், தென்றல் உலவும் எழில்மிகு அரமியம் எய்தி, தன் மார்பகத்தே அப்பிய குங்குமங் களைந்து சந்தனம் அளைந்து, முத்துவடம் பூண்டு சித்திரவமளியில் பதுமாசனமிட்டு அமர்ந்தனள். அமர்ந்தவள் முன்பு கடற்கரைச் சோலையிலே கூட்டிவைத்த இசை பிறழாமல், அங்ஙனேயிருந்த சீரிய யாழைக் கையிலேந்திக் குயிலும் நாண மிடற்றால் இன்னிசைபாடி வாசிக்கத் தொடங்கினாள்.

மன்னு மளிகள் மலர்தேடி
　　மதுவை யுண்டு வரைதோறும்
பன்னு சார லவையெங்கும்
　　பற்றி யார்க்கும் வகையேபோல்
முன்ன மோசை பலவாகி
　　முழுதும் வேறாய் மிடனென்றாய்த்
தென்ன வென்னு மிசைவளர்த்துப்
　　பண்ணு மாறு தேன்போல

வலி, மெலி, சமன் எனும் மூவகைப்பட்ட இசையும் நிற்கும்முறையிலே நிறுத்தி வாசித்துவருங்கால் "புறநிலை மருதம்" என்னும் பண்ணை வாசிக்கும்பொழுது காதலன் நினைவுதோன்ற, அந்தக்கணமே கருத்தழிந்து செயலற்றுக் கலங்கிச், சிறிய பூவாளியாலே பெரிய நிலமுழுதையும் ஆளும் ஒப்பற்ற செங்கோலையுடைய காமராசன் ஆணையாலே உலகமெல்லாம் தொழுதிறைஞ்சும் அவன் திருமுகத்தைத் தன் காதலனுக்கு விடுக்க நினைந்தாள்.

[காதலால் தான் வருந்து மியல்பைக்
கோவலனுக்கு ஓலையால் அறிவிக்க விழைதல்.]

சண்பக முதலிய நறுமலராற் றொடுத்த மாலையினிடையேயுள்ள தாழைப்பூவினது முதிர்ந்த மடலொன்றை யெடுத்து, அவ்வெள்ளிய மடலிலே, அதற்கயலதாகிய செவ்விபெற்றொளிரும் சிறு சண்பகத்தின் செவ்விய முகையை யெழுத்தாணியாகக் கொண்டு, அதனைச் செம்பஞ்சின் குழம்பிற் றோய்த்து உதறிப் பின்வருமாறு பன்னிப்பன்னி யெழுதலானாள் மாதவி.—"அன்ப! இனிய இளவேனிலென் முடங்கல் பான் இதுபொழுது ஆட்சிபுரிகின்றான்; நீட்டல் அவனே இளவரசன்! ஆதலால் அவன் தன தாளுகையை நெறிப்படச் செய்யான் மற்ற, மாலைப்பொழுதிலே அரும்புகின்ற காமநோயென்னும் விதனத்தின் [வேதனை] மேலே வந்து தோன்றிய திங்கட்செல்வனும் செவ்வியனல்லன்; பிறப்பிலேயே அவன் கோட்டமுடையவன்; எனவே அவன் நீர்மையை யானெடுத்தியம்பல் வேண்டா. ஆதலின் கூடி மகிழ்ந்தவர் ஊடலால் பிரிந்து சிறிதுகாலம் நீட்டிப்பினும், கல்விமுதலிய பொருள்களைத் தேடற்பொருட்டோ பிறகாரணங்களாலோ நாடிடை யிட்டுங் காடிடைவிட்டும் நீங்கிக் குறித்தநாளில் வாராது பொய்ப்பினும் அக் காமராசன் நறிய பூவாளியாலே இன்பநுகரு முயிரைக் கொண்டுவிடுதல் புதியதொன்றன்று. காதல, இதனை நீயிர் அறியின்" என எண்ணெண்கலைகள் ஒத்துடன்செல்லப் பண்களும் திறங்களு மாகியவற்றைப் பயில்தரு நாவால் முற்றாத மழலைச்சொற்களோடே பேசிப்பேசி யெழுதி முடித்தாள் மாதவி. முடித்தவள் அன்றைய மாலைப்பொழுதிலே தன்னுடைத்தோழி வயந்தமாலையை அழைத்துத் "தோழி! இம் மலர்மாலையை என் ஆருயிரனையார்க்குக் காட்டி, ஏழையேன் துயரனைத்தையுஞ் சாற்றி அவரை யிங்கே அழைத்து வருக" என அத் தாழைப்பூவின் மாலையை அவள் கையிலீந்தாள். வயந்தமாலையும் அம்மாலையைக் கைக்கொண்டு ஆவணமறுகிற் கோவலனைக் கண்டு,

ஊடினீர் எல்லாம் உருவிலான் தன்னாணை
கூடுமின் என்று குயில்சாற்ற—நீடிய
வேனற்பா ணிக்கலந்தாள் மென்பூந் திருமுகத்தைக்
கானற்பா ணிக்கலந்தாய் காண்!

[கழிக்கானலிலே உன் காதலி பாடிய பாட்டிற்கு வருந்தினோய்! 'உலகில் ஈருயிரும் ஓருயிராய்த் தத்தம் துணையொடு கூடி மகிழ்ந்து ஊடினவர்களே! அநங்கன் திருவாணையிது நீயிரெல்லாம் கூடுமின்' என்று குயிற்குலங்கள் சாற்ற, இதுபொழுது வந்து அரசு புரியும் இவ் விளவேனிற் பொழுதிலே நின்னைப் பிரிந்து சால நீடுதலால் நின்னொடு என்றுங் கலந்தாளாகிய நின் காதலி ஆற்றாளாகி, மெல்லிய பூவிலெழுதிய திருமுகத்தை, ஐய, காண்பாயாக.]

என்று ஓலையை நீட்டினாள். அவன் அதனை வாங்காது, "அன்பு நிறைந்தோய்! யான் உனது தலைவியின் இயல்பனைத்தும் நன்கு அறிவேன். அவள் என்பால் காதல்கொண்டது மெய்யோ பொய்யோ, கோவலன் யான் கூறல் வேண்டா. அன்று நாடக கூறிய வாங்கில் யானவளைக் கண்டதுமுதல் இந் மறுமொழி திரவிழா முடிவெய்தியவரை அவள் என்பால் காட்டிய அன்புநிலை இத்தகையது எனக் கடல் விளையாட்டிலே விளக்கிவிட்டாள். ஆ! அவளுடைய செயல்களின் திறனெலாம் என்னென் றியம்புவேன்? காதல்விஞ்சிய வஞ்சிபோன்று பிறரொருவர் கூட்டவன்றித் தானே யென்பால் முதற்கண் வந்து தோன்றிய தோற்றமும்; அங்ஙனந் தோன்றிய வளமணங்கமழ் கூந்தலின் சிறுசுருள் பிறைநிகர் நுதலிறபுரள, கருநெடுங்கண்கள் கயலெனத்திரிய, பவளவாய் திறந்து தவளநகை காட்டி மந்தகாசம் தந்து

நின்ற நிலையும், மற்று யான் ஊடிப்பிரிந்த வொருநாள் மாலைப்பொழுதிலே பிரிவாற்றாது அவள் நினைவே மிக்கு வருந்து மெலிவை, அவள் கிளிமொழியும் அன்னநடையும் களிமயிற் சாயலுங் கரந்து, தனது தோழியின் வடிவொடு என்பால் போந்து என்னைத் தேற்றிய வகையும்; அங்ஙனம் தேற்றியவள் யான் வருந்துமியல்பை நேரேகண்டும் என்னைப் புல்லி யெனது பருவரலை நீக்கவிழையாது நின்றநிலையும்; அதனால் மனம் ஒடிந்த யான் அணைதல் நிமித்தமாக அவள் சிலதியரிடத்துப் புலந்துகூறிய சில மொழிகளை, உண்மையாகவே யான் மனவேறுபாடுற்றுக் கூறினேனாக நினைத்து அவள் சென்றமையும்; அங்ஙனம் சென்றவள் எனது பிரிவால் தான் மனமிக மெலிந்தவள்போல் காட்டி, எனது உற்றோர்க்கும் மற்றோர்க்கும் தனது கழிபடுதுயரை யெடுத்துக் கூறிய தன்மையும்; மாலைப்பொழுதிலே அவள் தன் துயரை முன்போல் எனது உற்றோரை விடுத்துக் கண்டவரிடத்தெல்லாம் துயர் கைமிக்கவள்போல நடித்துச் செயலற்றுச்சோர்ந்துவீழ, அவர்கள் அவளையெடுத்துத் தேற்றியதும்-அந்தோ! பாவியேன் உண்மையென்றே நம்பினேன் நம்பினேன்! உன்தலைவி நாடக மாதவி மகளேயாதலின் என்பாற் காட்டிய அனைத்தோழிமன தும் நாடகமே யெனக் கருதுமாறு செய்து மெலிதல் விட்டாள். அத்தகையாளின் அன்பை மீண்டும் பெறமுயலல் வீணேயன்றோ?'' எனக் கூறி மறுத்துவிட்டான்.

"செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தா ரசோக மடலவிழக்—கொந்தார்
இளவேனல் வந்ததால் என்னாங்கொல் இன்று
வளவேனற் கண்ணி மனம்.''

[செவ்விய தாமரை யரும்புகள் அலரவும், மாமரங்கள் தளிர்க்கவும், அழகிய அசோகுகள் மலரவும் இளவேனிலன்றோ இது பொழுது வந்துளது! முடங்கலை மறுத்த இச்செய்தியை என் தலைவியறியின், அந்தோ! அவள் மனம் என்னாமோ?]

என வயந்தமாலை நொந்த சிந்தையளாய்ச் சென்று மாதவிபால் நிகழ்ந்தன யாவுங்கூறினள். அதனைச்செவிமடுத்த தூயசிந்தையளாய மாதவி வயந்தமாலையை விளித்துத் "தோழி! நம்தலைவர் கூறியனயாவும் உண்மையென்றே நம்புகின்றனையா? அந்தோ! அவர் எளியள்மீது பூண்டுள்ள அன்பின் திறன்முழுதும் நீயறியாய்; அவர் மொழிந்த அனைத்தும் காதற்கனிமொழிகள்; அத்தகையார் இன்று மாலை வாராதொழியார்; ஒழியினும் நாளைக்காலை நாம் ஈண்டவரைக் காண்ப துறுதி'' எனக்கூறித் தூமலரமளியிற் சோர்ந்து படுத்தனள். படுத்தவள் தன் காதலன் நினைவு கூரக் கண்ணொடுகண் பொருந்தாது, அவன் வருகையை நோக்கியவண்ணமே கிடந்தாள்.

தமிழ்ப் பாடம் 132.

[589-வது பக்கத் தொடர்ச்சி.]

நைடதம்—நளன் தூதுப் படலம்

ஒளிமுக மிழப்பவந் துற்ற நாணமீக்
கிளர்தர வில்லெனக் கிளக்கு மூர்ச்சனை
தெளிதர முகத்தினிற் றெளித்தற் கன்றுகொ
னளிபுனல் பொருளொடு நல்கு கின்றதே. 19.

(உரை):—(யாசகன் ஒருவன்) முகம்-தன்னுடைய முகமானது, ஒளி இழப்ப - ஒளியிழக்கும்படி, வந்து (பிறரிடத்து) வந்து, உற்ற - உண்டான, நாணம் - கூச்சம், மீ கிளர்தர - மிகவும் அதிகமாக, இல் என - "என்னிடத்தில் இது "இல்லை நீ தரவேண்டும்' என்று, கிளக்கும் - சொல்கின்றதால் அடைந்த, மூர்ச்சனை - மூர்ச்சையானது, தெளிதர - தெளியும்படி, முகத்தினில் - அவனது முகத்தில், தெளித்தற்கு அன்று கொல் - தெளிப்பதற்கு அன்றோ, பொருளொடு - தானமாகக் கொடுக்கின்ற பொருளுடன், நளி புனல் - குளிர்ந்த நீரையும், நல்குகின்றது - எப்பொழுதும் கொடுக்கலாகின்றது. (என்று நளன் தன்னுள் சிந்தித்துக் கொண்டனன்).

விரிவுரை:—இல்லாத கொடுமையால் ஒருவன் மற்றொருவன்பால் இரக்க வரும்போதே அவன் முகம் செத்து ஒளியெல்லாம் மழுங்கிவிடுகின்றது. பிறகு மிகுந்த வெட்கத்தோடு, "ஐய, எனக்கு இது இல்லை, நீ தரல்வேண்டும்'' என்று சொல்லி முடிவதற்குள் மூர்ச்சனையடைந்து விடுகின்றான். மூர்ச்சனையடைந்துகிடக்கும் அவனுக்கு அவன் கேட்ட பொருளை எவ்வாறு கொடுப்பது? ஆகையால் முதலில் அவன் மூர்ச்சையைத் தெளிவிக்கவேண்டும். மூர்ச்சைதெளிய முகத்தில் குளிர்நீரைத் தெளிப்பர். ஆகையாற்றான் எப்பொழுதும் தானப்பொருளுடன் நீரைச்சேர்த்துத் தருகின்றனர், என நளன் இங்கு ஒரு புதியகாரணம் கற்பிக்கின்றான். "இல்லை, எனக்கு ஈ'' என்று சொல்லவைத்து அவர் மானம்போகா வகை, குறிப்பறிந்து கொடுத்துவிடுவதே சிறப்புடைத்து என்பது இதன் கருத்து.

தானப்பொருளைப் புனலொடு வழங்கவேண்டுமென்பது ஓர் விதியாயிருக்க அதனில் நளன் தன் குறிப்பாக வேறொன்று அமைத்துக் கூறுவதால் இது தற்குறிப்பேற்றவணி. தற்குறிப்பேற்ற வணியின் வகைகளையும் அவைகளின் இலக்கணம் முதலியவைகளையும் முன்னர் (1-488,528)விரிவாகஉரைத்திருக்கின்றோம். நீரொடு பொருளை நல்குவதற்குக் காரணம் இதுவோ என்று காரணசம்பந்தம் கற்பிப்பதால் இது ஏதுத்தற்குறிப்பேற்ற அணி யாகவேண்டும். அல்லது மூர்ச்சனை தெளியவேண்டும் என்னும் பயனைக் கருதியே நீரும் நல்கப்படுகின்றது என்பது குறிப்பென்று கொண்டால் இதனைப் பயன்தற்குறிப்பேற்ற அணி என்றும் கொள்ளலாம். ஏதுவேனும் பயனேனும் இரண்டும் குறிப்பேயன்றி மெய்யில்லை. ஆனால், இந்தச் சந்தேகத்திற்கு இடம்தரும்படி பொருளொடு நீரை நல்குகின்றதாகிய நிகழ்ச்சியுளது. ஆகையால் இதனை உளபுல வேதுத்தற்குறிப்பேற்ற அணியென்றேனும், அல்லது உளபுலப் பயன்தற்குறிப்பேற்ற அணி யென்றேனும் கொள்ளலாம்.

குறிப்பு:—நளி + புனல். நளிபுனல் இகரவீற்று நளியென்னும் உரிச்சொல்லின்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை (3-467).

ஐந்தரு நீழலி னரசு வைகிய
விந்திரன் முதலினோ ரீகென் றென்னுழை
வந்துயர் பெரும்புகழ் வழங்கி னாரிவர்
சிந்தனை மகிழ்வுற வென்கொல் செய்வதே. 20.

(உரை):—ஐந்தரு நீழலில்-(தேவலோகத்திலுள்ள அரிசந்தனம் கற்பகம் சந்தானம் பாரிஜாதம் மந்தாரம் என்னும் ஐந்து தருக்களின் நிழலில், அரசுவைகிய - அரசுவீற்றிருக்கின்ற, இந்திரன் முதலினோர் - இந்திரன் முதலிய தேவர்கள், என் உழை வந்து - என்னிடத்தில் வந்து, ஈக என்று - 'கொடு' என்று கேட்டதால், உயர் பெரும்புகழ் - தம்முடைய உயர்ந்த பெரிய புகழை, வழங்கினர் - கொடுத்து இழந்துவிட்டனர் (இவ்வாறு இழந்து வருந்துகின்ற) இவர்-இவர்களது, சிந்தனை - மனமானது, மகிழ்வுஉற - மகிழ்வடையும் வண்ணம், என்கொல் செய்வதே - யான் இப்பொழுது செய்யவேண்டியது எதுவெனத் தெரியவில்லையே (என்றுநளன் தன்னுள் எண்ணி அயர்கின்றான்).

விரிவுரை:-"கேட்டவர்களுக்குக் கேட்டவைகளையெல்லாம் கொடுக்கவல்ல கற்பகத்தருவிற்கு இறைவனான இந்திரனே ஒரு குறையுற்று அது என்னால் தீரவேண்டுவதாயின், அதனை யான் எங்ஙனம் உணர்வேன், ஆற்றுவேன்'' என்று நளன் நைந்தான் என்பது இச்செய்யுளின் கருத்து. "இரவின் இளிவந்தது இல்லை'' யாகையால் "ஈக'' என்ற சொல்லைச் சொல்லி இந்திரன் தனக்குரிய புகழையெல்லாம் இழந்து வருந்துதல்வேண்டுமென்றும், அவ் வருத்தத்தைத் தான் ஆற்றுவது கடன் என்றும், பெருங்குணநலமுடைய நளன் நினைக்கின்றான். அல்லது "என்னிடத்தில் வந்துஈகஎன்று கேட்டதால் எனக்கு அவர் உயர்ந்த புகழைக்கொடுத்தனர்; இதற்கு ஈடாக நான் அவர்களுக்குக் கொடுக்கக்கூடியதும் ஒன்று இருக்கஇயலுமோ''வென நினைத்தானென்றுங்கொள்ளலாம். இரவச்சத்தையுங் கடந்து யாசிக்குமொருவன் தான் பெறும் பொருளினும் பெரிய புகழையும், ஈத்துவக்கும் இன்பத்தையும் வள்ளலுக்கு நல்குகின்றான். "இரத்தலும் ஈதலேபோலுங் கரத்தல் கனவிலுந் தேற்றாதார் மாட்டு'' என்ற குறளின் கருத்தை ஒருவாறு உட்கொண்டுளது இச்செய்யுள்.

என்னருந் தவத்தினன் றெனது தொல்குல
முன்னையோ ரருந்தவ முயன்ற பான்மையாற்
பொன்னகர் துறந்துநீர் போதப் பெற்றனன்
சொன்னவை மறுக்கிலன் சொல்க வென்றனன். 21

(உரை):—"என் - யான் ஒருவன் செய்த, அரும் தவத்தின் அன்று - அரிய தவத்தின் பயன் அன்று; எனது தொல்குல முன்னையோர் - என்னுடைய பழைய குலத்தில் தோன்றியுள பெரியோர்கள், அரும் தவம் முயன்ற பான்மையால் - செயற்கரிய தவங்களைச்செய்து முடித்திருத்தலால் அத்தவங்களின் தொகுதிப்பயனாய், பொன்நகர் துறந்து நீர் போதப் பெற்றனன் - பொன்னுலகத்தை வீட்டு நீங்கி இங்கு யான் காணும்படி நீங்கள் வரும்பாக்கியத்தைப் பெற்றேன். சொன்னவை மறுக்கிலன் - நீங்கள் எதுகேட்டாலும் மறுக்காமல் தருவேன் நான், சொல்க - அதனைச் சொல்லுங்கள்'' என்றனன் - என்று நளன் தேவர்களை நோக்கிக் கூறினான்.

விரிவுரை:—தேவர்களுக்கு முகமன்கூறிப் பின் அவர்கள் கேட்டதைக் கொடுக்கத் தான் இசைவதாக வாக்களிக்கின்றான் நளன். தான் ஒருவன் செய்துள தவம்எத்தனைப் பெரியதேயாயினும் தேவர்கள்பூமிக்கு வந்து தன்முன் நிற்கவல்ல பயனை அளித்தற்கு அது போதாதென்றும், ஆதலால் தன்குலத்தில் வந்துள வேந்தர்களெல்லாரும் செய்த தவங்களின் பயனெலாந் திரண்டு இப்பாக்கியத்தைத் தனக் களித்ததென்றும் முகமன் கூறியவாறாகும்.

ஆங்கது கேட்டவா னரசன் பொற்பினால்
வீங்குதோண் மாரனை வென்ற நீயலால்
யாங்குள ரவன்றொடுத் தெய்யு மின்னறுப்
பூங்கணை யால்வருந் துயரம் போக்குவார். 22.

(உரை). ஆங்கு அதுகேட்ட வான் அரசன் - அவ்வண்ணம் நளன் சொன்ன அதனைக் கேட்ட வானலோகத்திற்கு அரசனாகிய இந்திரன் (நளனைப் பார்த்து), "வீங்குதோள் மாரனை - பருத்திருக்கின்ற தோள்களையுடைய மன்மதனை, பொற்பினால் - அழகினால், வென்ற - சயித்திருக்கின்ற, நீ அலால் - உன்னைத் தவிர,—அவன் தொடுத்து எய்யும் - அந்த மன்மதன்தொடுத்து எய்கின்ற, இன்நறுப்பூங்கணையால் - இனிய தேன் உடைய புஷ்பபாணங்களால், வரும்- உண்டாகின்ற, துயரம் போக்குவார் - துயரத்தைப் போக்க வல்லவர், யாங்கு உளர் - எங்கு இருக்கின்றனர்?(எங்கும்இல்லை)-என்று மேலுஞ் சொல்லுவான்.

விரிவுரை:—பின், தமயந்தியின்பால் தமக்காகத் தூதுபோகவேண்டும், என்று வேண்டுவதற்கு இது பாயிரம் ஆகின்றது. "மன்மதன் வருத்துகின்றான். அவனைவெல்ல எங்களால் இயலவில்லை. நீயோ மன்மதனை அழகில் வென்றவனாயிருக்கின்றாய். இப்பொழுதும் வெல்லக்கூடியவன்நீ யொருவனே ஆதல் வேண்டும். உன் தந்தை அவுணரை வென்று எங்களைக் காத்ததுபோல் நீயும் அநங்கனை வென்று எங்களைக் காத்தல் வேண்டும்'', என்னுங் குறிப்புடைத்து இந்திரனது இவ்வாசகம். இதுவன்றி இன்னுமொரு நயமும் இச்செய்யுளில் பொதிந்திருக்கின்றது. "தமயந்தியின்பால் உன் காதலை மன்மதன் தூண்டுகின்றானாயின், எங்கள் பொருட்டு நீஅக்காதலை இப்பொழுது துறக்கவேண்டியவனா யிருக்கின்றாய். அதற்கு நீ மன்மதனை வென்று அகற்றுதல் அவசியம். மன்மதனை வெல்லல், 'ஊக்கம்உள்ளத்து உடைய முனிவரால் காக்கலா அது காமன்கை வில்'' என்றபடி ஏனையோர்க்கு இயலாததொன்றாயினும், முன்னரே ஒருமுறை பொற்பினால் வென்றுளாயாதலால் இப்பொழுது அவனை நீ காமத்திலும் வென்றகடப்பது எளியதாகலாம்'' என இந்திரன் முன்னறிவு புகுத்தினன்போலும்.

குறிப்பு:—போக்குவார் யாருளர், என்று முடித்துக்கொள்க. போக்குவார், இங்கு வினைமுற்றன்று, வினையாலணையும் பெயர், போக்குகின்றவர் என்பது பொருள் (1-248).

பூ+கணை=பூங்கணை:—இதனைப் பூவால்ஆகிய கணை என விரித்து மூன்ராம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை யென்றேனும் அல்லது, பூவாகியகணை எனவிரித்துப் பண்புத்தொகையென்றேனுங் கொள்ளலாம். இவ்விருதொடரிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுதல் வேண்டும். ஆயின் பூக்கணை, என்று ஆகும். ஆனால் பூ என்னுஞ் சொல் நிலைமொழியாயிருக்குமாறால், வல்லினமெய் மிகுவதோடு சில தொடர்களில் அவ் வல்லெழுத்திற்கு இனமான மெல்லெழுத்து மிகலாம். அந்தத் தொடர்கள் பின்வருவன.

1. உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள்.

பூ+பொழில்=பூம்பொழில்,பூப்பொழில் (பூவை உடைய பொழில்)2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

பூ+தாமம்=பூந்தாமம், பூத்தாமம் (பூவினால் கட்டிய தாமம்). 3-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

பூ+தேன்=பூந்தேன், பூத்தேன் (பூவில் உள்ள தேன்). 7-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

2. ஆறும் வேற்றுமைத் தொகை.

பூ+தாள்=பூந்தாள், பூத்தாள் (பூவினுடைய தாள்).

3. பண்புத்தொகை.

பூ+குயில்=பூங்குயில், பூக்குயில் (பூவாகியகுயில்—இங்குப் பூ என்பதற்கு, அழகு என்பது பொருள்).

பூ+சாமரை=பூஞ்சாமரை, பூச்சாமரை.

4. உவமத்தொகை.

பூ+கை=பூங்கை, பூக்கை (பூப்போன்ற கை).

பூ+தாள்=பூந்தாள், பூத்தாள் (பூப்போன்ற தாள் தாள்-பாதம்)

இந் நான்குதொடர்களிலும் வல்லினம் மிகலாமாயினும், மெல்லினம் மிகுந்து புணர்வதே சிறப்புடைத்து.மற்றத் தொடர்களில் வருமொழிமுதல் வல்லினமெய்யேதான் மிகும்; அதற்கினமான மெல்லினமெய் மிகுதல் கூடாது.

பூ+பறித்தான்=பூப்பறித்தான் (இரண்டாம் வேற்றுமைத் தொகை).

பூ+சொரிந்தது=பூச்சொரிந்தது (எழுவாய்த் தொடர்).

பூ+காய்=பூகாய், என உம்மைத் தொகையில் ஒரெழுத்தும் மிகாமல் புணரும்

இவ்விதம், மா என்னும் மரப்பெயர்க்குப்பின்னும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாமல் அதற்கினமான மெல்லினமெய்யே, மாங்காய், மாம்பழம், மாந்தளிர், மாஞ்சோலை, என மிகுந்து புணரும்.

வெயில்விரி மணிமுடி வீம னல்கிய
மயிலியல் மதர்விழி வளைக்கை மங்கைபாற்
செயிரறு தூதுநீ செல்ல வேண்டுமென்
றுயிரிரப் போரினு முளையக் கூறினன் 23.

(உரை) வெயில் - ஒளியை, விரி - விரிக்கின்ற, மணி - மணிகள் இழைத்த, முடி - கிரீடத்தை அணிந்த, வீமன் - வீமராஜன், நல்கிய - பெற்ற, மயில் இயல்-மயில்போன்ற சாயலையும், மதர்விழி-களித்த கண்களையும், வளைக்கை-வளைகளையணிந்தகைகளையும் உடைய, மங்கைபால் - பெண்ணாகிய தமயந்தியினிடத்து, நீ - நீ, செயிர் அறு - வஞ்சனையற்ற, தூது செல்லவேண்டும்-தூது எமக்காகப் போகவேண்டும்,'' என்று - என்று, உயிர் இரப்போரினும் - உயிரையே கொடு என்று கேட்பவர்களைக் காட்டிலும், உளைய - வருத்தம் உண்டாகும்படி, கூறினன் - இந்திரன் கூறினன்.

விரிவுரை:—தேவர் தன்பால் கேட்கக்கூடியவைகளில் தன்னுயிரிலும் உயர்ந்தது வேறொன்று மிருத்தல் இயலாது என்ற நினைவில் "பெறற்கரும் ஆவியும் பெட்பின் ஈகுவன்'' என உயர்வுசிறப்பு உம்மையோடு நளன் நிச்சயஞ்செய்தனன். தன் உயிரிலும் அருமையாய தமயந்தியையே கேட்பாரெனக் கனவிலும் எண்ணியிரான். ஆதலின் இந்திரன் உயிர் இரப்போரினும் உளையக் கூறினன், என்றது தக்கதாயது.

நைடதத்தின்படி, தனக்கே பெருங் காதலோடு தமயந்தி மாலையிட நிச்சயித்து இருப்பதை அன்னப் பறவை வாயால் அறிந்து சென்றவன் நளன். நளவெண்பாவிலோ, கருமத்தை இனிதின் முடித்துவந்த உவகையால் அன்னம் சிறிதிறுமாந்து யாதும் உரை வழங்காதிருக்க அதற் காற்றாமல் நளன் மூர்ச்சையாகிவிழுந்து பிறகு கண்விழிப்பதற்குமுன் ஏதோ விபரீதம் நேர்ந்துவிட்டதென்னும் பயத்தினால் அன்னம் பறந்தோடிவிடவே, தமயந்தி தன்னைக் காதலித்தாளோ அல்லளோ என்பதறியாமல் மற்றெல்லாரையும்போல் தானும் ஒருவனாய்ச் சுயம்வரத்திற்குச் சென்றவனாகின்றான். (1—249, 269). ஆதலின் நளவெண்பாவைக் காட்டிலும் இந்த நைடதத்தில், தனக்கென்று உரிமையாய காதலைக் கைகடக்கும்படி விடவேண்டிநேர்ந்த நளனது நிலைமை பின்னுமொரு பங்கு கொடியது.

ஒட்டக்கூத்தர் பாடிய
தக்கயாகப் பரணி
(உரையுடன்)
மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.
இதுவரையில் அச்சேறாத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.
விலாசம்:—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[587-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பத்து 9-ம்பதிகம்

6ம் பாசுரம்.

மாயனென் னெஞ்சி னுள்ளான் மற்றும் யவர்க்கு மதுவே
காயமும் சீவனுந் தானே காலு மெரியு மவனே
சேய னணியன் யவர்க்கும் சிந்தைக்கும் கோசா மல்லன்
தூயன் துயக்கன் மயக்கனென் னுடைத் தோளிணையானே.

பதவுரை:—மாயன் - ஆச்சரியமான சேஷ்டைகள் செய்யுமவன், என் நெஞ்சில் உள்ளான் - என் மார்பில் அணைந்து எழுந்தருளியிருப்பவன். மற்றும் யாவர்க்கும் அதுவே - மற்று யாருக்காவது இவ் வண்ணம் இருந்ததுண்டோ. (இது கேள்விகேட்கும் பிரகரணமாக அந்வயிக்க வேண்டும். இப்படிச் செய்தவன் எத்தகைய மகிமையுள்ளவன் என்ற விவரம் கூறுகிறார்.) காயமும் சீவனும் தானே - ஜீவாத்மாக்களின் தேஹங்களுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் ஆதாரமானவன். காலும் எரியும் தானே-காற்றிற்கும் தீக்கும் அந்தராத்மாவானவன். சேயன் - பக்திவாதங்களில் எவ்வளவு பெரியவரானாலும் அவர்களால் கிட்டக்கூடாதவன். அணியன் - பக்தர்கள் மனதினால் காணும்படி சமீபத்திலுள்ளவன். யவர்க்கும் சிந்தைக்குக் கோசரமல்லன் - யாராலும் நினைத்து அளவிட்டு அறியக்கூடாதவன், தூயன் - பரிசுத்தனைக் கொண்டு என்னால் அநுபவிக்கக் கூடியவன், துயக்கன் - குணங்களால் என் மனதை இழுத்துக்கொள்பவன், மயக்கன் - என்னிடத்தில் ஆசைவைத்து மயங்குபவன், என் தோளிணையான் - கெருடபகவான் மேல் ஆரோஹணிப்பதுபோலே என்தோளில் ஏறிக்கொள்கின்றான்.

குறிப்பு:-பகவானைப் புருஷவிக்ரஹமாய் அநுபவிக்கையிலும் அவன் ஸகல ஜடப்பிருகிருதிகளுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் தீ காற்று முதலிய பஞ்சபூதங்களுக்கும் அந்தராத்மாவாக இருப்பதை இவ்வாழ்வார் மறந்திலரென்பதை நினைவிற்கொள்ளவேண்டும். இப்பாசுரம் திவ்விய மங்களவிக்ரஹத்தில் ஈடுபாடானாலும் தத்துவங்களின் உணர்ச்சியில் ஆழ்வார் திருவுள்ளம்பற்றி யிருக்குமென்றறிக.

7ம் பாசுரம்.

தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும்
தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்
கேளிணை யொன்று மிலாதான் கிளரும் சுடரொளிமூர்த்தி
நாளணைந்தொன்று மகலா னென்னுடை நாவினுளானே.

அவதாரிகை:—இம்மஹாநுபாவனுடன் கலப்பு நிமித்தமாகவே திவ்விய சேர்வையையுடைய எம்பெருமான் அழகிற்கு வண்ணம் செய்வாரைப் போலே திருத்துழாயைத் தம் தோளிலும் மார்பிலும் தேஜோன்மயமான கிரீடத்தின் மேலும் தமது திருப்பாதங்களிலும் அணிந்து பின் தம்மோடு கலந்தான் என்று இப்பாசுரத்தில் அருளிச் செய்து தம் நாவிலே வந்து ஏறினான் என்கிறார்.

8ம் பாசுரம்.

நாவினுள் நின்றுமலரும் ஞானக்கலைகளுக் கெல்லாம்
ஆவியுமாக் கையுந்தானே அழிப்போடளிப் பவன்தானே
பூவியல் நால்தடந்தோளான் பொருபடையாழி சங்கேந்தும்
காவிநன் மேனிக்கமலக் கண்ணனென் கண்ணிலுளானே.

அவதாரிகை:—தன் நாவில் எழுந்தருளியிருந்த பிரான் பின்னர்த் திருக்கண் பிரதேசத்தில் ஏறினான் என்கிறார் ஆழ்வார்.

பதவுரை.

நாவினுள்நின்று மலரும் - நாவில்நின்றும் பெருகுகின்ற, ஞானக்கலைகளுக்கெல்லாம் - ஞானம் கொண்டு அறியக்கூடிய ஸகல வித்தைகளுக்கும், ஆவியும் ஆக்கையும் தானே-இப்படி அறியக்கூடிய ஸகல வித்தைகளின் ஸ்வரூப ஸ்திதி பிரவர்த்திகளுக்கும் காரணமாய், அளிப்போடு - காக்கும் வல்லமையோடு, அழிப்பவன் - அவைகளை அழிப்பவனுமாய், தானே-அந்த எம்பெருமானே, (அளிப்பும் அழிப்பும் அவனது லீலார்த்தமென்பது தாத்பரியம்) பூவியல்-புஷ்பம்போலே ஸ்வபாவமுள்ளவன். ஸுகுமாரமான திவ்வியமங்கள விக்கிரஹவிசிஷ்டன், நாற்றடந்தோளான் தீர்க்கமான நாலு புஜங்களையுடையவன், ஸ்ரீகிருஷ்ண பகவான் நாலு புஜங்களோடு ஜன்மித்தது இங்கு உணரற்பாலது. பொருபடை ஆழிசங்கேந்தும் - உலகங்களைப் பீடிப்பவரை அழிப்பதின்நிமித்தம் ஆயுதமாகச் சக்கரத்தையும் சங்கையும் ஏந்தி நிற்பவன், காவி நன்மேனி - காவிமலர்போன்ற மேனியை உடையவன், கமலக்கண்ணன் - புண்டரீகாக்ஷன், என் கண்ணிலுளான்-என் நாவினின்றும் கண்களையடைந்தான்.

189115

9-ம் பாசுரம்.

கமலக்கண்ணனென் கண்ணினுள்ளான் காண்பனவன் [கண்களாலே
அமலங்களாக விழிக்கும் ஐம்புலனுமவன் மூர்த்தி
கமலத்தயன் நம்பிதன்னைக் கண்ணுதலானொடும் தோற்றி
அமலத்தெய்வத் தோடுலக மாக்கியென் னெற்றியுளானே.

3, 4-ம் அடிகள்:—எம்பெருமானது உந்தியினின்றும் விளங்கும், கமலத்தயன் - தாமரை மலரின்மேல் இருக்கும் பிரம்மன் (அயன் - அஜன் - பிரம்மன்) கண்ணுதலானோடும்-நெற்றியில் கண்ணுடைய பரமசிவனோடும், தோற்றி - சிருஷ்டித்து, அமலத்தெய்வத்தோடு - பாபமில்லாத தேவதைகளோடும், உலகமாக்கி - உலகங்களைச் சிருஷ்டித்தவன், என் கண்ணினுள்ளான் - என் கண்களுக்குள்ளேயிருப்பவன், என் நெற்றியுள்ளான்-கண்களைவிட்டு நெற்றிக்கு ஏறினான்.

என்ன செய்து ஏறினானென்று முதலிரண்டு அடிகளில் உரைக்கின்றார். காண்பன் - என்னைக் குளிரக் கடாக்ஷித்து அருள்புரிவதை யான் காண்பன். அவன் கண்ணளி ஏற்படின் எல்லாம் அமலங்களாய் விடும்.

பகவானுடைய திருக்கண்களாலே அமலங்களாக என்னுடைய வினைகள் எல்லாம் போகும்படி கடாக்ஷி

யாகிற்கும். வினைகளின் காரியங்களாகிய மனவருத்தமெல்லாம் தீரும் என்பது பொருள்.

குறிப்பு:—நான் அவனைக்காணப் பெற்றேன். அவனும் தன்னுடைய சீதளமான திருக்கண்களால் என்னுடைய மனவருத்தமெல்லாம் நீங்கும்படி கண்குளிரப் பார்த்தருளுகின்றான். மற்ற இந்திரியங்களாலும் அவனை ஆநந்தமாய் அநுபவிக்கப்பெற்றேன். என்கண்ணினுள் இருந்தவன் நெற்றியில் ஏறி அங்கே உற்சாகத்துடன் உலாவுகிறான் என்கிறார்.

10ம் பாசுரம்.

நெற்றியுள்நின் றென்னையாளும் நிரைமலர்ப்பாதங்கள்சூடிக்
கற்றைத்துழாய்முடிக்கோலக் கண்ணபிரானைத்தொழுவார்
ஒற்றைப் பிறையணிந்தானும் நான்முகனும் இந்திரனும்
மற்றையமரரு மெல்லாம் வந்தெனதுச்சி யுளானே.

பொழிப்புரை:—பிறையையணிந்தசிவபெருமானும் நான்முகனாகிய பிரம்மாவும் இந்திரனும் மற்றைய எல்லா அமரர்களும், என் நெற்றியுள் நின்று என்னை ஆட்கொண்ட மஹாப் பிரபுவின் திருமலர்ப்பாதங்களைச் சிரஸில் வஹித்துத் தொழுவார்கள். அப்பகவானே கற்றைத் துழாயணிந்த கிரீடமுள்ள முடியனாய் விளங்குகின்றவன். என் நெற்றியிலுள்ள அவன் எனது சிரஸின் உச்சியில் ஏறி எழுந்தருளுகிறான்.

11-ம் பாசுரம்.

உச்சியுள்ளே நிற்கும் தேவதேவற்குக் கண்ணபிராற்கு
இச்சையுள் செல்லவுணர்த்தி வண்குருகூர்ச் சடகோபன்
இச்சொன்ன வாயிரத்து ளிவையுமோர் பத்தெம்பிராற்கு
நிச்சலும் விண்ணப்பம் செய்யநீள்கழல் சென்னிபொருமே.

என் சிரஸை அலங்கரிக்கும் தேவர்தேவனை கண்ணபிரானுக்கு என் ஹிருதயத்திலே நடவாநிற்கும் எனது இச்சையை உணர்த்த அதை அவன் உகக்க இந்தப் பரஸ்பரம் உள்ள மனோநிகழ்ச்சியில் உண்டான ஆயிரத்தில் இந்தப்பத்தை எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்தால் ஆச்ரிதர் எங்கு இருந்தாலும் அவர்கள் இறக்கும் ஸ்தானம்தேடி நீண்டுவரும் எம்பெருமான் திருவடிகள் நித்தியமாய் அப்பக்தர்கள் சிரசைப் பொருந்தும்.

இத்திருவாய்மொழி பக்தர்களுக்குப் பகவானுடைய கிருபை வெள்ளம்போல்வந்து அவர் அநுபவிக்க இயலாதபடி செய்யாமல் அவரவர் அநுபவம் ஆறஆற மெல்ல உவந்துவந்து அவர்களுக்குத் திருப்தியை ஊட்டுவிக்கும் அவர்கள் மனோரதம் எல்லாவற்றையும் ஆற்ற ஆற்றச் சிறகச் சிறகத் தந்து உபகரிக்குமென்று மஹாநுபாவனை ஆழ்வார் தம் அநுபவம் பரக்கக்கூறிப் பகவத்குணத்தை எவ்வாறு அநுபவிக்க வேண்டுமென்று நமக்குக் காட்டிக் கொடுக்கிறார்.

குறுந்தொகை

[596-வது பக்கத் தொடர்ச்சி]

கபிலர்] 106 [மருதம்

பரத்தையிற்பிரிந்த தலைமகன் தலைவியினது ஊடலை உணர்த்தும் வாயிலாக அனுப்பிய தூதரை வெகுண்டு அவள் தனதுபுலவி புலப்படத் தோழிக்குக் கூறியது.

புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
தீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று, வாழி தோழி; நாமும்
நெய்பெய் தீயி னெதிர்கொண்டு
தாமணந் தனையமென விடுகந் தூதே.

(உரை). தோழீ, புல்லிய வீழ்தினை யுடைய இற்றிமரத்தின் மலைமீதுபடர்ந்த வெள்ளியவேர்கள் மலையினின்றிறங்கும் அருவிபோலத் தோன்றும் மலைநாடனாகிய நந்தலைவன் குற்றமற்ற மனத்தினன் (நம்மிடத்து முன்போலப் போாத அன்பினன்) என்று தூதுவர் வாயிலாகச் சொல்லியனுப்பிய வார்த்தை வந்தது; நெய்வார்த்த தீயைப்போல சினம் மூண்டெழ நாமும் 'அவர் இங்கு வாராமலே அவரைக்கூடி இன்புற்றாற்போல் ஆயினேம் நாம்' என்று சொல்லிப் பதில் தூது விடுவோம்.

வீழ் - வீழ்து; சில மரங்களின்கிளையிலிருந்து கீழிறங்கும் வேர். இவர்தல் - செறிந்து படர்தல். தீதில் நெஞ்சத்து - (சினந்து சொல்லிய குறிப்பு மொழி) பொய்யும் வஞ்சமும் நிறைந்த மனத்தன் என்பது கருத்து. அவனது புறவொழுக்கத்தை அறிந்து துனிகொண்டிருந்த தனது சீற்றத்தை, தான் குற்றமற்றவனென்று சொல்லிவிடுத்த தூதுவர் வார்த்தை முன்னினும் அதிகமாய்க் கனற்றலால் நெய்பெய் தீயின் என்றாள். 'தாம் மணந்த அனையம்' என்றது, அவர்தம்மிடத்துமெய்யான அன்புடையவர் தம்மைப் பிரிந்திருக்கத் தரியாது விரைந்து மீண்டு தம்மிடத்து முன்போலத் தலையளிபுரிவர் என்று நன்கறிந்துளோம்; அவர் தாம் இங்கு வாராமல் அங்கேயே இருக்கலாம்; அவர் தாம் சொல்லியனுப்பிய வார்த்தையே அவரை நேரிற்கண்டு கூடினாற்போல மிக்க இன்பத்தைத் தமக்குத்தந்துவிட்டது; என்ற கருத்துக்கள் புலப்பட வெகுண்டுரைத்தது.

'தாம் அளந்தனையம்' என்ற பாடத்துக்கு, 'அவர் எவ்வாறு எம்மை மதித்துள்ளாரோ அத்தகையேம் யாம்' என்பது பொருளாகக் கொள்க.

மதுரைக்கண்ணனார்] 107 [மருதம்

நெடிதுபிரிந்து சேணகன்று மீண்ட தலைமகனுடன் காமந் தலைசிறப்பக் கூடி இன்புற்றுத் துயிலும் துயிலினைக் கெடுத்துத் தம்மை எழுப்பிய சேவலைத் தலைமகள் வெகுண்டு கூறியது

குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்!
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே, நெடுநீர்
யாண ரூரன் றன்னொடு
வதிந்தவெம் மின்றுயி லெடுப்பி யோயே.

(உரை). குவிந்த கொத்தாகிய செங்காந்தளின் ஒளிபொருந்திய பூவைப்போல ஒன்றுகூடிய செவந்த உச்சிக்கொண்டையின் திரளையுடைய சேவற்கோழியே, மிக்க நீர்வளத்தால் (நாடோறும்) புதுவருவாயினையுடைய மருதநிலத்தலைவனாகிய மகிழ்நனுடன் பள்ளியிடத்துக் கூடியிருந்து பின் அவசமுற்றுத் துயின்ற எமது இனிய துயிலினின்று எம்மை எழுப்பிய நீதான், இருள் செறிந்த நடுராத்திரியில் (உணவின் பொருட்டு) வீட்டின் கண்ணுள்ள எலியை எதிர்பார்த்துப் பதுங்கியிருக்கும் காட்டுப்பூனையின் குட்டிக்குச் சிற்றுணவாகிப் பெருங்கேட்டை உறுவாயாக.

தோன்றி - செங்காந்தள். சேவல் - விளி. வெருகு- காட்டுப்பூனை. பிள்ளை வெருகு - பூனைக்குட்டி. இதைப் 'பிள்ளை' யென்பது சிறுவரவினது. அல்கு இரை - குறைந்த, சுருங்கிய, அற்ப உணவு. கடுநவை - பெருந்தீங்கு, பெருங்கேடு. படீஇயரோ - படுவாயாக என்று சபித்தது. இன்றுயில் - கலவிக்குப்பின் அவசமுற்றுத் துயிலுந்துயில். எடுப்புதல் - எழுப்புதல்.

வாயிலார் தேவனார்] 108 [முல்லை

தலைமகன் மீள்வதாகக் குறித்துச்சென்ற கார்ப்பருவம் வந்தும் அவன் வாராமையைக் குறித்து வருந்திய தலைமகள் அந்தியம்பொழுதில் தனதாற்றாமை தோன்றக் கூறியது.

மழைவிளை யாடுங் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்று வயிற்படர் புறவிற்
பாசிலை முல்லை யாசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்
றுய்யேன் போல்வல், தோழி, யானே.

(உரை). மேகங்கள் தவழும் குன்றுகளைச் சார்ந்த சிறுகுடிகளினிருப்பை நோக்கிக் கறவையான்கள் கன்றுகளிடத்துச் செல்லும் முல்லைநிலத்தில் பசிய இலையையுடைய முல்லையின் குற்றமற்ற சிறந்த பூ அந்திவானத்தின் அழகைக் கொண்டது; தோழி, இனி நான் உயிர் பிழையேன் போலும்.

புறவு - முல்லை நிலம். செவ்வான்-செவ்வானம். செவ்வி- அழகு. கொண்டன்று - கொண்டது.

இறைச்சி:—'கறவை கன்றுவயிற் படர் புறவு' என்றமையால், வினைமேற்சென்ற தலைமகன் வினையை முடித்துத் தன்னை நினைந்து வந்திலனென்றும், 'முல்லைவான் பூச் செவ்வான் செவ்வி கொண்டன்று' என்றமையால் தான், தலைமகன் வரப்பெற்று அவனுடன் கூடிப் பொலிவுற்றிலள் என்றும் குறித்தவாறும்.

நம்பி குட்டுவனார்] 109 [குறிஞ்சி

வரைந்துகொள்ளாது களவொழுக்கம் புரிந்துநின்றதலைமகன் சிறைப்புறத்தானாக, அதனையறிந்த தோழி அவனை வரைவுகடாவுவாளாய்ப் புறத்தார் அலர்தூற்றலையும் தலைமகளின் கவினழிநிலையையும் அவனுக்கு அறிவிப்பான் வேண்டித் தலைமகளுக்கு உரைப்பாள்போலச் சொல்லியது.

முட்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்
புணரிய விருந்த ஞான்றும்
இன்னது மன்னோ நன்னுதற் கவினே.

(உரை). முள்ளை வெளியேகாட்டும் வளைந்த முதுகுப்புறத்தையுடைய இறாமீனின் பெருங்கூட்டத்தைக் கடலின் மோதும் அலைகள் கரைமீதொதுக்கும் நீர்த்துறைவனாகிய தலைமகன் உன்னை மணந்துகொள்ள இருக்கும் இந்த நாளிலும் உனது நல்ல நெற்றியினழகு இவ்வாறு சிதைந்து போயிற்று. (இஃதேனோ?)

இகுதிரை - மோதுந்திரை. (வினைத்தொகை.)

கிளிமங்கலம் கிழார்] 110 [முல்லை

தான் வருவதாய்க் குறித்த கார்ப்பருவங் கடந்து கூதிர்ப்பருவம் வந்தும் தலைமகன் வாராமையைக் குறித்து அழிந்த தலைமகள் அவனது அன்பின்மையை நினைத்து வருந்தித் தோழிக்குக் கூறியது.

வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ, தோழி, நீர் நிலைப்பைம்
போதுளரிப் புதன்மலி யொண்பொறிக் கரு
நுண்மு ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த [விளை,
வண்ணத் துய்மல ருதிரத் தண்ணென்
றின்னு தெறிவரும் வாடையொ
டென்னு யினள்கொ லென்னு தோரே.

(உரை.) தோழீ, நீர்நிலைகளிலுள்ள பசியபூக்களை அசைத்து, புதல்களில், நிறைந்த ஒள்ளியபொறிகளையுடைய கருவிளைமலர்களும், நுட்பமான முட்களையுடைய ஈங்கையின் செவந்த அரும்புகள் மலர்ந்த அழகிய மெல்லிய மலர்களும் உதிரும்படி குளிர்ந்து துன்பந் தருவதாய் வீசும் வாடைக் காற்றால் தலைவி என்ன தன்மையளாயினளோ என்று எண்ணாத அவர் வாராவிடினும் வந்தாலும் அவரால் இனி நமக்காவதென்ன?

யாராகியர் - என்ன உறவினராவர்? ஏதிலரே போல்வர் என்றபடி. ஈங்கை - இண்டங்கொடி. துய்மை - மென்மை. வாடையொடு - வாடையால் (உருபு மயக்கம்).

தீன்மதி நாகனார்] 111 [குறிஞ்சி

ஊரார் அலர்தூற்றும்வண்ணம், தலைமகன் வரைந்துகொள்ளாது காலந்தாழ்த்துழிக் கவன்று வாட்டமுற்ற தலைமகளின் வேறுபாட்டைக் கண்ட அன்னை, அதன் காரணத்தை அறியும்பொருட்டு வேலனைக்கொண்டு வெறியாட்டயர்விக்கக் கருதியதை அவளுக்கு உணர்த்துவாள் போன்று, தலைமகன் சிறைப்புறத்தானாதலை உணர்ந்த தோழி அவனை வரைவுகடாவுவாளாய்க் கூறியது.

மென்றோ ணெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவே ளென்னும்; அன்னையும்
அதுவென் றுணரு மாயின், ஆயிடைக்
கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகற் செழுமலை நாடன்
வல்லே வருக, தோழி, நம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.

(உரை). நங்காய், வேலன் உனது மெல்லிய தோள்களை வாடச்செய்த துன்பத்தை, மிக்க வெற்றியையுடைய முருகவேள் தந்தது என்பானாயின், உனது அன்னையும் அதனை உண்மையென்று நம்புவாளாயின், அவ்விடத்து நமது இல்லத்தாரது மிகவும் நகைத்தற்குரிய செய்கையைச் சிறிது காணுமாறு குள்ளமான கரிய பிடியின் கைமறைந்தாற்போல விளக்கமுற்ற பெரிய கருங்கற்பாறைகள் செறிந்த செழிப்புற்ற மலைநாடன் விரைவாக வருவானாக.

செல்லல் - நோய். ஆயிடை - அவ்வெறியாடுமிடம். தோழி - தலைமகளைத் 'தோழி' யென்று விளித்தது, அவ்விருவரும் ஒருத்திக்கு மற்றொருத்தி தோழியாகலின்.

வேலன் - முருகவேளுக்கு வெறியாட்டெடுக்கும் பூசாரி; முருகவேளைப் போல வேடந்தரித்து வேலேந்தி முருகவேளுக்குப் பூசையாற்றி ஆவேசமுற்றுக் குறிசொல்பவன். பெருநகை - (ஆகுபெயர்) மிகவும் நகைத்தற்குரிய செய்கை; தலைமகளுக்கு மேலொரு தீங்கும்செய்யாது காத்து நலம்புரியுமாறு முருகவேளுக்குப் பூசனையாற்றல், மறிப்பலியீதல் முதலியன.

ஆலத்தூர் கிழார்] 112 [குறிஞ்சி

தலைமகன் களவொழுக்கத்தையே விரும்பி மேற்கொண்டு வரைவுநீட்டித்தவழிப் புறத்தெழும் அலரையஞ்சிக் காதலனைக் கைவிட்டு அகற்றமாட்டாமலும், மற்று, பிறர் கூறும் வசைமொழியைப் பொருள்செய்யாது களவொழுக்கத்திலேயே நிற்கமாட்டாமலும் உளமழிந்த தலைமகள் தனது துன்ப நிலையைத் தோழிக்குச் சொல்லியது.

கௌவை யஞ்சிற் காம மெய்க்கும்;
எள்ளற விடினே உள்ளது நாணே;
பெருங்களிறு வாங்க முறிந்து நிலம்படாஅ
நாருடை யொசிய லற்றே,
கண்டிசின், தோழி, அவருண்டவென் னலனே.

(உரை). (நாணத்தைவிடாது) புறத்தார்கூறும் அலர் மொழிக்கு நான் பயப்படுவேனாயின் காமம் தேய்ந்து கெடும்; அவ்வாறு பிறரேசுதலொழிய இக்காமத்தை நான் விட்டால்தான் எனது நாணம் நிலைநிற்பதாகும். (அவ்வாறன்றி இக் களவொழுக்கத்தையே நான் விழைந்து ஒழுகாநிற்பேனாயின் நாணத்தை அறவே விட்டொழித்தல் வேண்டும்.) (காமத்தையும் தவிர்க்கமாட்டாது நாணத்தையும் விடமாட்டாது)வருந்தியழிவதும், தலைவரால் நலனழிந்தும், ஆகிய எனது நிலை, பெரிய யானை வளைத்தலால் முறிந்தும், முற்றுமொடிந்து தரையில் விழாத நார்ப்பற்றினையுடைய மரக்கிளையைப்போல இருக்கின்றது; இதனைத் தோழி நீ காண்பாயாக.

கௌவை - அலர். என் - என்னுதல்: (முதனிலைத் தொழிற் பெயர்.) என் அற-என்னளவும் இராதபடி, என்றுமாம். உள்ளது நாணம் - நாணம் உளதாகும்; நிலைநிற்பதாகும். நார் - the fibre of trees. ஒசியல் - ஒடிந்த மரக்கிளை: (ஆகுபெயர்). கண்டிசின் - இசின், ஒரு முன்னிலை அசைச்சொல். உண்ட - நுகர்ந்த, அனுபவித்த. உண்ட நலன் - உண்டு அழித்துக் கழித்த தனதுநலனெழில், கற்புநிலை முதலியன.

மாதீரத்தார்] 113 [குறிஞ்சி

பகற்குறியிடத்துத் தலைமகளைப் பன்னாள் களவிற் கூடி வரையாதொழுகுந் தலைமகனைப் பிறரையுறுவண்ணம் வேறோரிடத்து வரும்படி தோழி அவனுக்குக் குறிப்பாற் குறியிடம் பெயர்த்துக் கூறியது.

ஊர்க்கு மணித்தே பொய்கை; பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே;
இரைதேர் வெண்குரு கல்ல தியாவதுந்
துன்னல் போகின்றாற் பொழிலே; யாமெங்
கூழைக் கேர்மணங் கொணர்கஞ் சேறும்,
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

(உரை). ஊர்க்கும் அணிமையதே பொய்கை; அப்பொய்கைக்குத் தூரத்ததுமன்று சிறிய கான்யாறு; அதன் கரைக் கருகிலுள்ள பொழிலோ இரையைத் தேடும் நாரையையன்றி வேறெதுவும் சேர்தலில்லாதது; யாம் எங்கள் கூந்தலுக்கு அழகிய மணமுள்ள மலர்களைக் கொண்டுவருவதற்கு அவ்விடத்து (அடிக்கடி) செல்வோம்; அவ்விடத்துப் பெரிய பேதையளாகிய எமது தலைவியும் வருவதுண்டு; (இனி நீ அவ்விடத்து வந்து அவளைக் கூடப்பெறுவாயாக.)

வெண்குருகு - வெள்ளாங்குருகு, நாரை. போகின்று-போக்கின்று, செல்லுதலில்லை. கூழை - மகளிர் கூந்தல். மணம் - (ஆகுபெயர்) நறுமலர். சேறும்-செல்தும். 'ஆண்டும் வருகுவள் பேதை' என்பதை 'ஆண்டு வருகுவள் பேதையும்' என்று உம்மையைப் பிரித்துக் கூட்டுக.

'ஊர்க்கணித்தே பொய்கை' என்றமையால் அதனருகிலுள்ள பழைய குறியிடமாகிய பொழில் களவுக்கூட்டத்துக்கு அத்துணை ஏற்றதன்று என்றும், 'பொய்கைக்குச் சேய்த்துமன்று', 'வெண்குருகல்லது யாவதும் போகின்று' என்றமையால் எவ்வாற்றானும் பொருந்திய குறியிடம் இதுவேயாம் என்றும், குறிப்பாலுணர்த்தியவாறு காண்க. தலைவியைப் 'பெரும்பேதை' என்றது களவொழுக்கந் தவிர்ந்து தன்னை வரைந்துகொள்ளும்படி தலைமகனை வற்புறுத்தாது அக்களவொழுக்கினுக்குத் தானும் உடன்பட்டிருக்கும் அவளது அறியாமையைக் குறித்து.

போன்னாகனார்] 114 [நெய்தல்

பகற்குறியிடத்துத் தலைமகளை உய்த்துத் தலைமகனுடன் கூட்டிவைத்தகன்ற பாங்கி அக்கூட்டம் நிகழ்ந்தபின்னர்த் தனித்து மீளுந்தலைமகளை உடன்கொண்டு சென்று தோழியராயத்திற் சேர்த்துவிட்டு, மீண்டுந்தலைமகன் தனித்திருந்தவிடத்துச்சென்று, அவனை எதிர்ப்பட்டு, "நின் வேண்டுகோளுக்கிசைந்து நின்வயப்பட்ட என்தோழி வருந்தாவண்ணம் நீ பாதுகாத்திடுவாய்" என்று ஓம்படை சாற்றுவாள்போன்று வரைவு பயப்பக் கூறியது.

நெய்தற் பரப்பின் பாவை கிடப்பினென்
நின்குறி வந்தனென், இயறேர்க் கொண்க;
செல்கம், செலவியங் கொண்மோ; அல்கலும்
ஆரல ருந்தும் வயிற்ற
நாரை மதிக்கு மென்மக ணுதலே.

(உரை). கடற்கரையிடத்துக் கானற்பரப்பில் பாவை போன்ற எந்தலைமகளைத் தங்கவைத்து உனது குறியிடத்து (உன்னைக்கண்டு சிலசொல்லவந்தேன்.) ஓடுந்தேரையுடைய நெய்தனிலத் தலைவா; நாங்கள் எமதூருக்குத் திரும்புவேம். நீயும் உனதூருக்குச் செல்ல விடைகொள்வாயாக. நாள்தோறும் ஆரல் மீன்களை உண்டு வயிறு நிரம்பிய நாரை, எம்மகளின் (மெல்லிய, ஒள்ளிய) நுதலைப் பூவென்று மதித்து அதனையே வியந்து நோக்காநிற்கும், அத்தகையினள் அவள். (அவளைத் துயராணுகாது நீ பாதுகாத்திடுவாயாக.)

பாவை - (ஆகுபெயர்) தலைமகள். குறி-குறியிடம். இயந்தேர். (வினைத்தொகை) இயலும், செல்லும் தேர். கொண்கன் - நெய்தனிலத்தலைவன்; சேர்ப்பன்; 'கணவன்' என்றுமாம்: தன்னுடன் வேற்றுமை யில்லாத தனது தோழியின் கணவனாதல் பற்றிக் 'கொண்க' என்று விளித்தாளாம். வியம் - ஏவுதல்; கட்டளை; கோரிக்கை; a request couched in the form of a command—என்மகள் - எனது தோழி; மகள்' என்றது 'பெண்' என்பதுபோல இங்கு முறைமை சுட்டாது நின்றது. மதிக்கும் - கருதும், நன்கு மதிக்கும்; 'மிதிக்கும்' என்றும் பாடம்.

கபிலர்] 115 [குறிஞ்சி

களவொழுக்கத்தின் இறுதிக்கண், தலைமகளை உடன்கொண்டுசென்று வரைந்து மீளத்துணிந்த தலைமகனது விருப்பிற்குத் தலைமகளை ஒருப்படுத்திக் குறித்தவிடத்தில் அவளைக் கொண்டுசென்று தலைமகனிடத்துக் கையடைப்படுத்து மீளுந் தோழி அவளை அன்புடன் பாதுகாத்திடுமாறு ஓம்படை சாற்றிக் கூறியது.

பெருநன் றாற்றிற் பேணாரு முளரே?
ஒருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர்வழி மதி; இலை கவரப்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட! நின்னல திலளே.

(உரை). பெரியதோர் நன்மையைத் தமக்குச் செய்தவரைப் பேணாதிருப்பவர் எவருமிரார். அப்படிக்கன்றி எந் தலைவி உமக்குச் சிறியதோர் நலத்தைச் செய்தவளேயெனினும், அவளிடத்து அன்பை மிகவும் வைத்து, அவள் (எக்காரணத்தானும் எப்பொழுதேனும்) வருத்தமுறுவாளாயின் அவ்வருத்தத்தைத் தீர்க்கும் வழியை மதித்திடுவாய். இலையை உண்ண விரும்பிக் குளிர்ந்த வாசனைபொருந்திய மலைச்சாரலிலே பீடுற நடந்த மெல்லிய நடையையுடைய மரையா (அதனைப் பெற்றுண்டு கவலையற்றுத்) துயிலும் நல்ல மலைநாட்டுக் குரியவனே, இவள் நின்னையன்றிப்பற்றுக் கோடாவார் பிறரெவரும் இல்லாதவள்.

புரி - விருப்பம், அன்பு. புலவி - வருத்தம், துயரம். பாடு - பெருமை. மரையா - மரையாகிய ஆ (இருபெயரொட்டு) மரை - ஒருவகை விலங்கு; காட்டுக் குதிரை இதற்கு 'ஆ' என்றும் பெயருண்டு.

இறைச்சி:—இலையைக் கவர்ந்துண்டு மரை துஞ்சும் மலை நாடன் என்றமையால், அவனும் அவ்வாறே தலைவியை வதுவையாற்றிக்கொண்டு இன்பந்துய்த்து இல்லின்கட் கவலையின்றித் துயில்வதே நோமென்று குறிப்பாலுணர்த்தியவாறும்.

இளங்கீரனார்] 116 [குறிஞ்சி

இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து தலைமகளை விட்டுநீங்குந் தலைமகன் தன்னெஞ்சிற்குக் கூறியது.

யானயந் துறைவோ டேம்பாய் கூந்தல்
வளங்கெழு சோழ ருறந்தைப் பெருந்துறை
நுண்மண லறல்வார்ந் தன்ன
நன்னெறி யவ்வே; நறுந்தண் ணியவே.

(உரை). (எனது நெஞ்சே) யான் விரும்பி (அதனால்உன்னிடம் நீங்காது) உறைபவளாகிய தலைமகளின் நறுமணம் பரந்த கூந்தல், சோழரது வளப்பம் மிக்க உறையூரிடத்துள்ள (காவிரியின்) பெருந்துறையில் நுண்ணிய கருமணலின்மீது அரித்தோடும் நீர் ஓடினாற் போல அழகிய நெறிப்புடையன; நல்ல குளிர்ச்சியையுடையன.

தேம் - நறுமணம். பாய் - பாய, பரவிய. 'தேம்பாய் கூந்தன் மாயோள்' (ஐங்குறு. 324) என்றார் பிறரும். அறல் - அரித்தொழுகும் நீர். நெறி - நெறித்தல், நெறிப்பு; மயிரின் வளைவு. நுண்மணல் அறல் வார்ந்தன்ன நன்னெறிக் கூந்தல் - கருமணலின்மீது நீர் அரித்தோடுவதால் உண்டாகும் சிறு மேடுபள்ளங்களைப் போல மடிப்புற்ற கூந்தல்; wavy tresses. உறந்தை - உறையூர்; சோழர்களின் பழைய அரசிருப்பு நகர்களிலொன்று; the modern town of Trichinopoly. நறுமை - நன்மை.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[594வது பக்கத் தொடர்ச்சி]

அறமே நினைத்தும் ஆற்றுவா ரின்னல்.

மந்தரையின் முடிவானசொற்களைக் கம்பரது காவியத்துள் ஆயுங்கால் ஒன்றுவிளங்கும். கைகேயி, "நின்வழிக்கு இசையேன்" என்றுரைத்த காரணத்திற்கு இவை எதிருரை யாகாமை வெளிப்படை. 'வரன்முறை திறம்புதல் வழக்கன்று' என்பது ஒன்றே கப்பராமாயணத்தின்படி கைகேயி வற்புறுத்திக் கழறியதாகும். இவ்வரன்முறை யாதென்பதும் வான்மீகத்தி லிருப்பதுபோல், "இராமன் மூத்த குமாரனாகையால் அரசநீதிப்படி பட்டத்துக்குத் தக்கவன்" எனக் கம்பரில் காணப்படவில்லை. ஆயினும், இங்ஙனம் வெளிப்படையாய்க் கைகேயி நீதியை எடுத்துக்காட்டியிருந்தும் அதற்கு யாதும் அமைதி இயம்பநினையாத வடமொழிக் கூனி, தமிழிலோ,

மூத்த வற்குரித் தரசெனு முறைமையி னுலகம்
காத்த மன்னனி னிளையனன் றோகடல் வண்ணன்
ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்றால்
மீத்த ருஞ்செல்வம் பரதனை விலக்குமா றெவனோ

[மூத்தவனுக்கே அரசு உரியதாகும் என்ற முறைமைப்படி பார்த்தால்—உலகத்தைக் காத்த தயரத மன்னனைக் காட்டிலும் இராமன் இளையவன் அல்லனோ? அவ்வாறிருக்க, எல்லாராலும் புகழப்படுகின்ற பெரிய கிரீடத்தை இராமன் அணிவதற்கு இசைந்தானென்றால்—அந்தப் பெரிய செல்வத்திலிருந்து பரதனைமாத்திரம் நீக்குவது என்னவோ]

என்றோர் காரணத்தைக் கூசாது கூறத்துணிகின்றாள். காலில்லா முடமாகிய இக்காரணம் ஒரு சிறிதும் செல்லாதென்பதற் கையமில்லை. மைந்தரில் மூத்தோற் குரியது அரசெனா அவளுரைத்தால் அதற்கிவள், "மைந்தனில் தந்தை மூத்தவனல்லனோ; ஆதலினால் இளையோனுக்கும் அரசுரிமை யெய்தலாம்; எனின், அவ்விளையவன் இராமனாயின் என், பரதனாயின் என்?" எனக் கூனி சாதிக்கப் புகுந்தது, கைகேயியின் பேதைமையைக் கருத்திற்கொண்டேயன்றித் தன் சொல்வன்மையில் நம்பிக்கை வைத்து நேர்ந்ததா யிருக்கஇயலாது. இவ்வமைதி பொருந்துக, பொருந்தாதொழிக, 'வரன்முறை விலகல் வழக்கன்று' என்பதொன்றுமட்டுமே செப்பிய கைகேயிக்குக் கூனி உரைத்தற்குரிய விடை இதனோடு முடிந்துவிடல் வேண்டும். ஆனாலோ, அவ்வாறு முடிந்திலது. வான்மீகத்தில் கைகேயி கூறியவைகளுக்கும் இங்குக் கம்பர் நூலினுள் எதிருரைக்கலாகின்றாள் கூனி.

இராமன் கோமுடி சூடுதலால் தனக்கேனும் பரதனுக்கேனும் யாதுந் தீதில்லை என்னக் காட்டுவான் முற்பட்ட கைகேயி, இராமனது நற்குணங்களைப் பாக்கக்கூறி, "எனக்கு இராமன், பரதனைவிடப் பிரியமானவன். இராமன், கௌசல்யையிடம் எவ்வளவு அன்பும் ஆதரமுமாக இருக்கின்றானோ, அதனினும் மேலாகவே என்னிடத்தில் இருக்கின்றான், இராமனுக்கு இராச்சியம் கிடைத்ததென்றால், அது பரதனுக்குக் கிடைத்தாற் போலத்தான்; ஏனெனில், இராமன் தனது தம்பிகளைத் தன்னைப்போலப் பாவித்திருக்கிறானே அன்றி வேறில்லை" என்று வான்மீகத்தில் சாற்றுகின்றாள். இதற்கெதிராக அங்கு, "இராமன் பரதனுக்குத் தீங்குசெய்வான் என்பதில் சந்தேகமில்லை" என்பன போன்ற மொழிகளையே கூனி திருப்பித்திருப்பிக்கொட்டிமெழுகுகின்றாளே யன்றி,

அறனி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
மறநி னைந்துமை நலிகில ராயினு மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையறு வின்னல்

[அறம்முதிர்ந்த அருளோடுகூடிய அரிய தவசிகளுக்கும், பெறுதற்கரிய செல்வத்தைப் பெற்றபின் மனம் வேறாகிவிடும். அதுவுமன்றி, இராமனும் கோசலையும் ஏனையோரும் கொடுமை செய்யவேண்டும் என்ற கருத்தோடே உன்னையும் பரதனையும் வருத்தாமலிருப்பார்களானாலும், அவர்களது சொல் செயல் முதலியவைகளால் உங்கள் மனம் உடையும்படி இடைவிடாத் துன்பத்தை விளைவித்துக்கொண்டே இருப்பார்]

என்று மானுட இயற்கைபற்றிய காரணம் ஒன்றும் அங்கு முயன்றிலள். செல்வம் வந்துற்றகாலை எத்தகையவர் சிந்தனையும் திரியும் என்று முதலிரண்டடிகளில் கூறியதும், "வேண்டு மென்றே உங்களை வருத்தாராயினும், தாழ்ந்தநிலையிலுள்ள நீங்கள் இன்னலெய்தாமற்றீராது" என்று பின்னிரண்டடிகளிற் காட்டியதும், கயவர்திறத்தில் உண்மைபாகுமேனும் புன்புத்தியுடைய கூனிக்கு மானுட இயற்கையின் இருண்ட பாகமே புலப்படுமாதலால், அனைவரையும் அக் கயவரினத்திலேயே சேர்த்துப் பேசுகின்றாள். கூனுடைய இவளுள்ளம் அதற்குமே லெட்டலாற்றாது. கைகேயியின் மனத்தைத் திரிப்பதற்கென்று கூறியதுமாத்திரமன்றி மந்தரை தன் புன்மனத்தால் நம்பிய கொள்கையும் இதுவே எனினு மமையும்.

"கௌசலையும் இராமனும் மற்றவர்க்கோ ரூறு செய்யா உத்தமகுண முடையவர்களென்றே கொள்வோம். ஆயினும், பெறலருந்திருப் பெற்றபின் அவர் சிந்தனை வேறுபட்டு உங்களுக்குக் கொடுமை செய்ய வேண்டு மென்னுங் கருத்தினர் ஆயினும் ஆகலாம்.

மற்று, செல்வம் பெற்றபின்னும் சிந்தனைகெடாமல் இருந்து அவர் கொடுமைநினைத்து உமக்கு யாதும் ஊறு செய்வதில்லை என்றே கொள்வோம். அப்பொழுதுங் கூட உங்கள் மனமுளையும்படியான இன்னல்கள் இடைவிடாமல் ஏற்படு மென்பது திண்ணம்'' என வகுத்துரைத்த கூனி, இதன்மேல் இத்தகைய இன்னல்கள் இன்றியமையாவாறு நேர்வதற்குரிய நிலைகளை நுண்ணிதினுய்ந்து உதாரணங்களாக உரைக்கின்றாள். கேட்பாளக் கூனி,

புரியுந் தன்மக னரசெனிற் பூதல மெல்லாம் [ருல்
விரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையா மென்
பரியு நின்குலப் புதல்வற்கு முனக்குமிப் பார்மேல்
உரிய தென்னவ ளுதவிய வொருபொரு ளல்லால்

[இவ்வுலகமெல்லாம் தன்மகனே அரசுபுரிந்தானாயின், பேராசையால் பெருகுகின்ற மனதையுடைய கோசலைக்கு அவையனைத்தும் உடைமையாய்விடும். எனின், உன் அன்புடைய சிறந்த புதல்வனுக்கும் உனக்கும், இந்தப் பூமியின்மேல், அக்கோசலை உதவினாலன்றி வேறு உங்களுக்கு உரிமையான பொருள் எது]

"நீ வேண்டியன வெல்லாம் வரையாது கௌசலை கொடுத்தனளேனும், உன்னுடைய உரிமையால் கையாளவல்ல பொருள் இல்லை என்பதை நினைக்குங்கால் நாளும் நின்மனம் இறவுறுதோ இயம்புவாய்" என அந்நிலையின் தாழ்மையைக் குறிப்பதுமன்றி அதனால் வரவிருக்கும் ஏதங்களையும்,

தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் துய
ரீண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவளை [ரால்
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்ம ஞேயால்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி

[யாசிக்கும்படி தூண்டுகின்ற கஷ்டமும் தரித்திரமும் தொடர, துன்பத்தோடு இங்குவந்து உன்னை இரக்கின்றவர்களுக்கு, அக்கௌசலையின்பால் நீ யாசித்துப் பெற்றுப் பெரிய செல்வத்தைக் கொடுப்பாயோ, அல்லது, அவளைப் போய்க் கேட்பதற்கு நாணிஇருப்பாயோ, அல்லது கேட்பவர்க்குக் கொடுக்க இயலவில்லையே என்ற மனவருத்தத்தால் இறந்துபோவாயோ, அல்லது கேட்டவர்க்கு இல்லையென்று மறுத்துவிடுவாயோ, எவ்வாறு வாழ்வாய் இயம்பு] என எடுத்துக் காட்டுகின்றனள். மனத்தால் மறம் நினைந்து அவர் நலிகிலராயினும், நெஞ்சம் இவளுக்கு இறவுறும்படி நேர்வது இன்றியமையா தென்பதை இத்துணை அருமையாய் விளக்கிவரும் கூனியின் மொழிகளுக்குக் கைகேயியின் உள்ளத்தின் வண்மை மெல்லமெல்ல இரையாகி எதிர்கின்றது. கூரிய நோக்குடைய சிறுகட் கூனி இதனைத் தெரிந்துகொண்டு, வெப்பம் மாறுமுன் இரும்பை வேண்டிய உருவத்திற் கடித்துக்கொள்ள வேண்டுமெனும் சூழ்ச்சியால் அவ்விரவலரைப் பின்னுஞ்சிறி தண்மியராக்கி,

சிந்தை செய்கையிற் றிகைத்தனை யினிச்சில நாளில்
தந்த மின்மையு மெளிமையு நிற்கொண்டு தவிர்க்க
உந்தை யுன்னையுன் கிளைஞர்மற் றுன்குலத் துள்ளோ
வந்து காண்பதுன் மாற்றவள் செல்வமோ மதியாய் [ர்

[மனமும் செய்கையும் நீ தடுமாறுகின்றாய். இனிச் சில காலத்திற்குப்பிறகு, உன் தந்தை தாய் உன்கிளைஞர் மற்று உன் சுற்றத்தார் முதலானோர், தத்தம் வறுமையையும் தாழ்மையையும் உன்னைக்கொண்டு நீக்கிக்கொள்ளும் கருத்தினராய், உன்பால் வருவாராயின், அவர் வந்து உன் சக்களத்தியின் செல்வத்தையோ காண்பது, யோசித்துப் பார்] என்று உறுத்துவாளெனில் எம்மகள் பேதைமனம் திரியாதிருக்கும்? பிறந்தகத்திற்கென் றெளிதில் இளகவல்ல வோர் பாகம் பெண்ணென்பார் இதயத்திலென்றென்றும் எங்கெங்கு மிருப்பது திண்ணம். கைகேயியின் இதயத்தின் அம்மெல்லிய இடத்தை வந்து தேடுகின்றாள் மந்தரை. "நின்னை ஈன்றவர் முதல் உன் சுற்றத்தாரீறுக உள்ளவர்கள் தமக்கோர் இடும்பைவந் துற்றகாலை, 'பேரரசி எம்மகள் அயோத்தியிலுளள், அவள்பாற் சென்று எம் இடுக்கண் களைந்து கொள்வம்'' என ஆர்வமொடு வந்து, "எல்லாம் இவள் மாற்றவள் செல்வமே; அவள் உதவுவதல்லாலிவளுக்குரிமை யொரு பொருளில்லை. அவளை வேண்டியோ, இவள் எம்மைத் தாங்குவாள். வெள்காளோ இவள், வெள்கோமோ நாம் இதனிற்கு?'' என அவர் அயர்ந்திடுவது கண்டு நீ எங்ஙனம் ஆற்றுவாய்!'' என்றக்கால் எம்மகளுள்ளம் ஏங்காது நிற்கும். இங்ஙனம் ஏங்கித் திகைக்கும் மனத்தினை மேன் மேலும் மருட்டும்வண்ணம் கூனி மற்றொரு பூதத்தை எழுப்பிவந்து அச்சுறுத்துகின்றனள். "கேகயன் தன் குலத்தொடும் அல்லலுற் றவந்தனாய் என் முன் வந்திரக்கவும் நேருமோதான், என்று நீ பேதாய், இறுமாந் திருக்கவேண்டா. உன்னாலேயே அவன் அந்நிலைக்கு வருவது மாகலாம். ஏனெனில்

காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் றந்தையைத் தெறுகில னிராமன்
மாது லன்னவ னுந்தைக்கு வாழ்வினி யுண்டோ
பேதை யுன்றனை யாருளர் பழிபடப் பிறந்தார்

[உன்மேல் காதலுள்ள உன் பெரிய கணவனுக்குப் பயந்து, கொவ்வைக்கனிபோன்ற வாயையுடைய சீதையின் தந்தையாகிய சனகன் உன் தந்தையைப் பொருது அழிக்காமல் இருக்கின்றான். அந்தச் சனகன், பட்டத்திற்கு வரவிருக்கும் இராமனுக்கு மாமனார் என்பதை மறவாதே. இனி உன்தந்தை சனகனுக்குத் தப்பி வாழமுடியுமோ! பேதையே உன்னைப்போல பழிபடப் பிறந்தவர் வேறு யார் இருக்கின்றனர்]

"தயரதன் துணையில்லையேல் என்செய்வான் கேகய வேந்தன். இராமன் நல்லனேயாயினும், மறம் நினைந்துன் தந்தையை நலிகிலனாயினும், சனகன் கேகயன்மீது போர்தொடுத்தால், இராமன் இருதிறத்துஞ் சேராமல் வாளாவிருப்பதல்லால் உந்தைக்குப் படைத்துணை நல்கமாட்டான்?'' என்ற கூனியின் மொழிகளில் சனகனுக்கும் கேகயனுக்கும் குறித்த பகை வான்மீகத்தில் இயம்பப் பெறவில்லை. எனினும் பிள்ளைமதியுடைய கைகேயியை மருட்ட மந்தரையின் புணர்ப்பிற்குஇது ஏற்றதாயிற்று. இராமனது பட்டாபிடேகத்தில் கைகேயி கொண்டிருந்த ஊக்கம் மெல்லமெல்ல ஒடுங்குகின்றது. சனகனுக்கும் கேகயனுக்கும் சமரிலாதொழிய இராமன் சந்துசெய்து வையானோ என்னுமோர் எண்ணம் இவளை இயக்குமெனில், அதனாலும் பயனில்லை எனக் காட்டுதற்கு விரைவாளாகிய கூனி,

மற்று நுந்தைக்கு வான்பகை பெரிதுள மறத்தார்
செற்ற போதிவர் சென்றுத வாரெனிற் செருவில்
கொற்ற மென்பதொன் றெவ்வழி யுண்டது கூறாய்
சுற்ற முங்கெடச் சுடுதுயர்க் கடல்விழத் துணிந்தாய்.

[உன் தந்தைக்குக் கொடிய பகைவர் வேறு அநேகரும் இருக்கின்றனர். அவர் வந்து அழிவு செய்கின்ற காலத்தில் இவ் வயோத்திஅரசர் வந்து உதவிசெய்யாராயின் உன் தந்தை வெற்றி பெறுவதென்பது எவ்வழியில் இயலும்? இவ்வாறு உன் சுற்றத்தாரையும் கெடுத்து நீயும் கொடிய துயரமென்னும் கடலில் விழ நினைத்துவிட்டாய்]

என்று மிகமிகப் பரிந்தவள்போல் நடுக்கமுறுகின்றனள். "மாசறு குணத்தால் மிக்க மாண்புடையவன் இராமன்; என்பால் கரையரிய அன்புடையன்; அவனெனக்கு யாதுந் தீதுசெய்வானல்லன்'' என்ற நினைவின் உறுதி நிலைத்தகருத்தினால் அவனரசினைக் கைகேயி உவந்தனளாயின், அதனைக்கம்பராமாயணத்தில் அவள் வெளியிடாவிடினும், அக்குறிப்பிருக்கலாமென்றாகித்த மந்தரை இதனால் அவ்வுறுதியை வேருடன் களைந்தெறியும் வகைசூழ்ந்து புரிகின்ற வஞ்சனை கொடுமையிற் பெரியது; திறமையிலுஞ் சிறியதன்று.

கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப்பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா **4**. தபால் செலவு வேறு

EDUCATIONAL PUBLISHING CO.
Nungambakam, Madras.

Estd. NATIONAL **1906**
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-**9, Old Court House St., Calcutta.**

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply to the Company to-day.

R. G. DAS & Co, OR K. S. GOPALAYYA
Managers. *Branch Secretary,*
Loane Square, Broadway, Madras.

முருகன் அல்லது அழகு

ஸ்ரீமான்-திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் யாத்தது. இஃது இயற்கை அழகை எடுத்துக்கூறும் நூல். இயற்கை அன்னையின் மாண்பை இந்நூற்கண் காணலாம். இந்நூற்கண் முருகன் சொற்பொருள் விளக்கம், அழகினியல், இளமைப்பேறு, இயற்கை மாண்பு, நோன்பு, வழிபாடுகளின் திறம், முருகனடியார் இயல்பு முதலியன ஓதப்பட்டிருக்கின்றன. இந்நூலை முற்றும் பயில்வோர் உள்ளத்தில், இயற்கை வழிபாட்டில் ஆர்வம், ஒரே கடவுள் ஒரே நெறி என்னும் உறுதி, எவ்வுயிர்க்குந் தீங்கு நினையாப் பேரறம் முதலியன நிலவும். இயற்கை வருணனையும் உரை நடையும் நெஞ்சைக் கவரும்.

விலை ரூபா 1.

	ரூ.	அ.
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ...	2	8
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை ...	2	0
தமிழ்த் தென்றல் ...	2	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ...	1	0
சைவத் திறவு ...	0	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே ...	0	8
சைவத்தின் சமரசம் ...	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும் ...	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம் ...	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஏககாலத்தில் வாங்குவோருக்குத் தபாற்செலவின்றி, மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
பிரசுரங்கள்.

சங்க நூல்

சென்னைப்பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்
திருவாளர் - கா. ரா. கோவிந்தராஜ முதலியார்
எழுதியது.

தமிழின் அரும்பெரும் செல்வமாய் வாய்த்திருக்கும் சங்ககால இலக்கியங்களைக் கற்பவர்க்கு இணையிலாப் பேருதவி யளிக்கவல்ல இந்நூல் எவ்வெவர் மாட்டும் இருக்கவேண்டியது இன்றியமையாதது. முச் சங்கங்களின் வரலாறும், அவ்வச் சங்கங்களில் பாடப்பெற்ற நூல்களின் தன்மையும், இவையனைய பிறவும் இந்நூலின்கண் விளக்கிஇருக்கக் காணலாம். இத்தகைய அறிவினை யளிப்பதுடன் ஓதுதற்கும் நனி இனிது இந்நூல். தமிழ்ப்பற்றுடையவ ரனைவர் கையிலும் இந்நூலொன்று இல்லாமல் தீராது. சங்க நூல்களைப் படிக்க ஆரம்பிப்பதற்குமுன், இந்நூலைக் கற்றிருப்பாராயின், அச் சங்கநூல்களின் உண்மைப் பொருளையும், அழகையும், பயனையும் உணர்வது எளியதாகும். விலை ரூபா 1—4—0.

கந்தபுராண வசனம்

வித்வான்
என். வி. முத்துகிருஷ்ண ரேட்டியாரவர்கள்
எழுதியது.

முருகப் பெருமானது திருவவதாரச் சிறப்பினையுரைக்கும் கச்சியப்பசிவாசாரியார்தம் பெருங்காப்பியமாகிய கந்தபுராணச் செய்யுள்களைத் தழுவித் தெளிவும் இனிமையும் வாய்ந்த செந்தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள இந்நூல், முதனூலின் பெருமையிற் சிறிதுங் குறையாமல், தமிழழகு பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசிப் பத்தித்தேன் சொட்டி ஞானங் கனிந்த வொரு கற்பகத் தருவிற்கு நிகராகு மென்பதிலையில்லை. ஆறுமுகமுடைய அருட்பெறும் குமரவேளின் திப்பிய சரித்திரத்தைச் செய்யுள்வாயிலாக ஓதியுணர்ந்து அவர் கருணைக்கு ஆளாகவல்லார் சிலரேயாக, எத்தகையினோரும் எளிதில் படித்துத் தெரிந்துகொள்ளுமாறு வசனநடையில் வரைந்துள இந்நூல் தமிழரனைவர்க்கும் அருமருந்துபோல் அமைந்திருக்கின்றது. (கிளேஸ் பேபர்) விலை ரூபா 2—8—0.

கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி
திருவல்லிக்கேணி, :: :: சென்னை.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

தனிப்பாடல்

நாமகள் திருப்பள்ளி யெழுச்சி

பன்னிய புறமொழி விழைவெனுங் கங்குல்
பைப்பைய விடிந்தது படரொளி பரப்பி
மன்னிய நின்புக ழாயிரஞ் சுடர்க்கை
வானவன் நாவெனும் மலைமுக டுதித்தான்
துன்னிய புறமொழித் தாரகைச் சூழல்
சுடரொளி யவிந்தன குவிந்தனர் தொண்டர்
என்னித யத்துறை முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. க

சந்தனச் சிலம்பினி லிசைக்குயில் கூவுந்
தருமருட் பாவினச் சங்கொலி மேவுஞ்
செந்தமிழ்த் திருப்புகழ்ச் சேவல்கள் யாவுஞ்
சிறைபுடை யடித்தெதிர் சிலம்பிடக் கூவும்
அந்தமில் கலைக்குரு காற்றிய வொலியும்
அடியவர் சயசய வமலையு மலியும்
எந்தமை யாண்டருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. உ

அன்புடை யடியவர் அகப்புனற் றடந்தோ
றறிவெனும் தாமரை முகைநெகிழ்ந் தவிழ்ந்த
வன்புடைப் பேதைமை மடுவினிற் பூத்த
வஞ்சனை பொய்முதல் மலர்வகை குவிந்த
இன்புடை யறம்பொரு ளின்பமும் வீடும்
எய்துதல் விருப்பினில் யாவரு மெழுந்தார்
என்புயிர் பெறவருள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ங

புத்தலர் பூங்குழற் புயல்புறந் தவழும்
புதுநில வுமிழ்மதி முகமலர் பொழியும்
முத்தன விளநகை முறுவலின் கருணை
முந்துறக் கண்டடி முளரிகள் தொழுவான்
பத்திமை யடியவர் கோயிலின் வாயில்
பாடின ராடினர் பரவினர் படர்ந்தார்
இத்தரை மதித்திடு முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ச

மீட்டிய யாழினர் குழலின ரொருபால்
வெண்டுகிற் பட்டினர் விரையின ரொருபால்
கூட்டிய சுண்ணத்தர் வண்ணச் செஞ்சாந்தர்
குளிர்புனல் மஞ்சனக் குடத்தின ரொருபால்
தீட்டிய செழுந்தமிழ் மாலைய ரொருபால்
திருவடி வணங்குபு திறையொடு புகுந்தார்
ஏட்டினி லெதிர்தவழ் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. ரு

ஆரன் றனைக் கூடலி லழைத்தமை பாடி
அருமறைப் பூட்டினை யவிழ்த்தமை பாடிச்
சிரந்தனை யறுத்துயிர் கொடுத்தமை பாடித்
தீயின்மே லாடிய திறமையும் பாடி
வரந்தரு வாரமுங் கோவையும் பாடி
வாசகம் பாடிநல் வாய்மொழி பாடி
இரந்தனர் தொண்டர்கள் முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. சா

முப்புர மெரிசெய்த முதுபரம் பொருளும்
முருகனு மொருகுறு முனிவனும் பிறரும்
செப்பிய செழுந்தமிழ்ப் பாண்டிநன் னாட்டில்
திருவொடும் வளர்த்தருள் செய்தவப் பாவாய்
கைப்பிடி புதுமலர் கொண்டுன தடியார்
காமரு சேவடி கைதொழ வடைந்தார்
இப்படி துதித்திடு முத்தமிழ்க் கடலே
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. எ

நாவாலி, க. சோமசுந்தரம் பிள்ளை.

வர்த்தமானம்

வடஜெர்மனியில் ஆகாயப் போக்குவரத்துக் கம்பனியார் ரயில்வேப் போக்குவரத்துப்போல் குறைந்த செலவில் விமானப்போக்குவரவை ஏற்படுத்தியுள்ளனராம். இப்பொழுது அங்கு 5மைல் தூரம் செல்ல ஒருவருக்கு 2 ஷில்லிங் 8 பென்ஸ் கட்டணமாம்.

***

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் பெருவெள்ளம் ஏற்பட 2000வீடுகள் சேதமாயின. 7000 பேர் வீடு வாசல் இல்லாமல் தவிக்கின்றனர். வயல்களெல்லாம் முழுகிப்போயின. உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் அதிகமென்றும் அயல்நாட்டுச் செய்தி ஒன்று கூறுகின்றது.

***

ஸ்ரீ பண்டிதர் மாளவியா, ஸ்ரீ வல்லபாய் பட்டேல் முதலியவர்களின் தலைமையில் பம்பாயில் சத்தியாக்ரஹஊர்வலம் நடந்தது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஊர்வலத்தைத் தொடர்ந்தனர். பம்பாய்ப் போலீஸ் கமிஷனர் இது சட்டவிரோதமான கூட்டம் எனக்கொண்டு ஸ்ரீமாளவியாவையும் வல்லபாய் பட்டேலையும்கைது செய்தார். பின்னர்க்கூட்டம் கலைந்து போகாததால் போலீசார் பலவந்தமாகக் கலைத்தனர். நூற்றுக்கு அதிகமானபேர் காயமடைந்தனர் என்று பம்பாய்ச் செய்தி மூலம் தெரிகின்றது.

***

தென்மேற்கு ஆப்பிரிக்காவில் துத்தநாகம்போன்றவொருவகை உலோகம் அகப்பட்டுள்ள தென்றும், அதைத் தேய்த்தாலும் அல்லது மற்றொரு பொருளுடன் அடித்தாலும் விளக்குப்போல் எரிந்து வெளிச்சந் தருமென்றும், நீரினிற்குள் வைத்திருந்தாலும் அவியாது வெளிச்சம் தருகின்றதென்றும் தெரியலாகின்றது.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜன்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதருஸ்
18915
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
ஜீவஸுதா (Reg.)
பாதாமி ரசாயனம்
பிருங்காமலக தைலம்
டிப்போ., பம்பாய் கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD
பிரான்சு: மதுரை காஞ்சீபுரம்.
ஜெனரல் ஏஜென்ட்:-யுனைடட் கன்ஸர்ன் 54 பந்தர் தெரு, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும்,பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கப்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு	சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,,	,,	2 8 0
தனிப்பிரதி	விலை	அணா	0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும்,அற்புதமாகவும் இருக்கும்.ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

காந்திக்கு ஜேய்!



கதர் சில்க் அங்க வஸ்திரம்.

சுத்த கதர் சில்க். கையினால் செய்த பட்டு. 5 மு. பட்டு 1-க்கு ரூ. 3-8-0 முந்துங்கள். 500 பட்டுகளே வந்திருப்பதால் உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஸெண்ட்ரல் ஸ்டோர்ஸ்

373 எஸ்பிளநேடு, சேன்னை.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)